# உதயன்

சுடர் :35 கதிர் :171 வைகாசி 05 ஆம் நாள் திங்கட்கிழமை 18 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2050



கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



3

வெளியிடங்களில் நடமாடும் போது முகக்கவசங்களைப் பாவித்தல் எம்மையும் மற்றவரையும் நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்கும்.


## பெற்றோல் விலை அதிகரிப்பு

கொழும்பு, மே 18
லங்கா ஐ ஓ சி நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் ஒக்டேன் 92 பெற்றோலின் விலையை 5 ரூபாவால் அதிகரிக்க தீர்மானித்துள் 13

## முள்ளிவாய்க்கால் பேரவலம்

# மே 18 இனப்படுகொலை நினைவுகூரல் இன்று



Photograph of Amarathaas

யாழ்ப்பாணம், மே 18
சிங்கள– பௌத்த பேரினவாதம் மனிதாபிமானத்தைக் கொன்று புதைத்து முள்ளிவாய்க்கால் மண்ணில் நடத்திய இனப்படுகொலையின் 11ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். தமிழர் தாயக தேசத்தில் உரித்துடன் – உரிமையுடன் வாழ்வதற்காக, சிங்கள அரசுகளால் வலிந்தழைக்கப்பட்ட போர் முடிவுக்கு வந்து இன்றுடன் 11ஆண்டுகள் முடிவுறுகின்றன. நூறாயிரம் 08

## கொரோனா 981

கொழும்பு, மே 18
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 21 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொற்றுக்குள்ளானவர் 13

## குழு மோதல் இருவர் கைது

*அத்தாயில் சம்பவம்*

யாழ்ப்பாணம், மே 18
அத்தாய்ப் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்று 13

## வீடுகளில் நினைவேந்தலை கடைப்பிடிக்கத் தடையில்லை

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*

கொழும்பு, மே 18
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை பொது இடங்களில் கடைப்பிடித்தால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள். வீடுகளில் அமைதியான முறையில் நினைவேந்தலை நினைவுகூர்வதற்கு எந்தத் தடையும் இல்லை. இவ்வாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் யாழ்ப்பாணத்தில் பொது இடங்களில் கடந்த சில தினங்க 08

## நினைவேந்தல் நடத்திய 11 பேர் தனிமைப்படுத்தல்!

*தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முக்கியஸ்தர்களுக்கே இந்த நிலை!*

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார நிகழ்வில் பங்கேற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 11 பேரையும் வீடுகளில் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்த 08

## நினைவேந்தலுக்கு தடை

யாழ்ப்பாணம், மே 18
உதயன் பத்திரிகை நிறுவனம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தலைமையகம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரின் இல்லம் ஆகியவற்றில் இன்று திங்கட்கிழமை பொது நிகழ்சிகள் ஒன்றுகூடல்கள் எதனையும் நடத்த தடை விதிக்கும் நீதிமன்ற தடை உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் மார்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 13

## உறவுகள் என்ற பெயரில் புலிகளை நினைவுகூர இங்கு அனுமதி இல்லை

*படையினரின் தியாகத்தை கொச்சைப்படுத்த வேண்டாம் என்கிறது மஹிந்த அணி*

கொழும்பு, மே 18
மே 18இல் உறவுகள் என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூர இந்த நாட்டில் எவருக்கும் அனுமதி இல்லை. இப்படியான வேலைகளைச் செய்து இராணுவத்தினரின் தியாகங்களைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று தமிழ்த் தரப்பினரிடம் நாம் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறு மஹிந்த அணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

**விமல் வீரவன்ச**

இறுதிப்போரில் மூன்று தரப்பிலும் பாதிப்புகள் இடம்பெற்றன. அதாவது புலிகள் தரப்பிலும், இராணுவத்தினர் தரப்பிலும், தமிழ் மக்கள் தரப்பிலும் பாதிப்புகள் இடம்பெற்றன. போரில் உயிரிழந்தவர்களை 13

## தாழமுக்கம் சூறாவளியானது!

கொழும்பு, மே 18
வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடற் பிராந்தியத்தில் உருவாக்கியுள்ள 'அம்பான்' தாழமுக்கம் தற்போது சூறாவளியாக மாற்றமடைந்துள்ளது வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இந்தச் சூறாவளியானது திருகோணமலையில் இருந்து வடகிழக்கு திசையில் நிலைகொண்டுள்ள காரணத்தால் இன்று தொடக்கம் நாட்டில் இடி மின்னலுடன் கூடிய கனமழை மற்றும் பலத்த காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
வங்காளவிரிகுடாவில் ஏற்பட்டுள்ள 'அம்பான்' தாழமுக்கம் 13

## நினைவேந்தல் சுடரேற்றினால் துப்பாக்கிச் சூடு நடக்கலாம்

*இராணுவம் அல்லது வேறு யாரும் செய்யலாம் என்று மிரட்டுகிறது பொலிஸ்*

யாழ்ப்பாணம், மே 18
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈகைச் சுடரேற்ற தடைவிதித்த பொலிஸார், மீறிச் செயற்படும்போது இராணுவத்தினரோ அல்லது வேறு அமைப்புகளோ துப்பாக்கிச் சூடு மேற்கொண்டால் தாம் பொறுப்பல்ல என்றும் எச்சரிக்கை 08



# தாலிக்கொடி அறுத்தவர்கள் முச்சக்கரவண்டியுடன் கைது

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணம் நவாலியில் குடும்பப் பெண்ணிடம் 11 பவுண் தாலிக் கொடியை அபகரித்துச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து தாலிக்கொடி மீட்கப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டிச் சாரதியும் மற்றொருவரும் இணைந்து கொள்ளையில் ஈடுபட்டிருந்தனர். வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணிடமே நேற்று சனிக்கிழமை தாலி அறுக்கப்பட்டது. எனினும் துவண்டு விடாத அந்தப் பெண், முச்சக்கர வண்டியின் இலக்கத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து முச்சக்கரவண்டி இலக்கத்தையும் வழங்கினார். விசாரணை நடத்திய பொலிஸார், முச்சக்கரவண்டியை இனங்கண்டு அதன் சாரதியைக் கைதுசெய்தனர். பின்னர் மற்றையவரும் கைதுசெய்யப்பட்டார். தாலிக்கொடி அவர்களிடமிருந்து மீட்கப்பட்டது. (து-26)

# ரவிகரனிடம் விசாரணை

முல்லைத்தீவு, மே 18

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று இடம்பெறவுள்ள நிலையில், அது தொடர்பாக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனிடம் பொலிஸார் நேற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ள னர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தற்போதைய சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும், சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்பவும், முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் என்று பொலிஸாருக்கு விளக்கமளிக்கப்பட்டது என்று ரவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவது தொடர்பில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று என்னிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதுவரை காலமும் எவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நினைவேந்தல் செயற்பாட்டை முன்னெடுத்தோமா அதேபோல் இம்முறையும் நினைவேந்தல் நடத்தப்படும் என்று விளக்கமளித்தேன். தற்போதைய நிலமைக்கு ஏற்பட்ட இயலுமானவர்கள் இந்த நினைவேந்தலில் கலந்துகொள்ளமுடியும்- என்றார். (எ-246)

# இந்த ஆண்டு ஏ.எல். பரீட்சையில் கல்குலேட்டர் பயன்படுத்தலாம்

கொழும்பு, மே 18

இந்த ஆண்டு இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில், 4 பாடங்களுக்கு மாத்திரம் கணிப்பான்களை உபயோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய நிழற்படுத்தப்படாத சாதாரண கணிப்பான்களை உபயோகிப்பதற்கு அனுமதி வழங்க பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. பொறியிலுக்கான தொழிநுட்பவியல், உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல், தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞான மற்றும் கணக்கீடு ஆகிய நான்கு பாடங்களுக்கு மாத்திரம் கணிப்பான்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (க)

## வைரஸ் பரவ காரணமான

# சீனாவுக்கு எதிராக நடவடிக்கை இல்லையேல் வெளிவிவகார அமைச்சருக்கு சட்டச் சிக்கல்

## இப்படி எச்சரிக்கிறார் சட்டத்தரணி சுனந்த

கொழும்பு, மே 18

**கொரோனா வைரஸ் இலங்கை உள்ளிட்ட ஏனைய உலக நாடுகளில் பரவியமைக்கு சீனா பொறுப்புக் கூற வேண்டும். அவ்வாறு சீனா பொறுப்பு கூறாமலிருக்குமானால் அந்நாட்டு எதிராக இராஜதந்திர மட்டத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு அண்மையில் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கத்தின் தலைவர் எச்.வீ.ஆர்.புஷ்பகுமாரவினால் வலியுறுத்தப்பட்டிருந்தது. அவரால் வலியுறுத்தப்பட்டதன்படி சீனாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இலங்கை வெளியுறவுகள் அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தன்னால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக எச்.வீ.ஆர்.புஷ்பகுமாரவின் சட்டத்தரணி சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

சட்டத்தரணி சுனந்த தேசப்பிரிய வெளியுறவுகள் அமைச்சருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை உள்ளிட்ட உலக நாடுகள் அனைத்திலும் கொரோனா வைரஸ் அனைத்து துறைகளிலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் சுகாதாரம் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலை மைக்கான காரணமாக அமைந்த கொரோனா வைரஸ் பரவலுக்கு சீனா பொறுப்புக் கூற வேண்டும் என்று இதற்கு முன்னர் எனது தரப்பினால் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு வைரஸின் உண்மை தன்மை பற்றி மறைத்தல் மற்றும் அதனை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து இனங்காணப்படாமை என்பவற்றோடு வைரஸ் தொடர்பில் உரிய மதிப்பீட்டுக்கு வர முடியாததால் உலகில் ஏனைய நாடுகளிலும் வைரஸ் பரவுவதற்கு காரணமாக அமைந்தது.

இதற்கு சீனா பொறுப்புக் கூற வேண்டும் என்பதே எமது தரப்பு வாதமாகக் காணப்பட்டது. இது தொடர்பில் இலங்கையின் வெளிநாட்டுறவுகள் அமைச்சர் மற்றும் அவருக்கு கீழ் செயற்படும் வெளிநாட்டுவுறவுகள் அமைச்சு கவனம் செலுத்தவேண்டும் என்றும், இதற்கு சீனா பொறுப்பு கூறாவிட்டால் அதற்கு எதிராக செயற்பட வேண்டும் என்றும் பிரஜைகளின் உரிமைக்கான எமது தரப்பு கோரியிருந்தது.

அதற்கமைய எனது தரப்பு நாட்டு மக்களின் உரிமைக்காக சீன அரசுக்கு எதிராக இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு சீனாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இலங்கையின் அரசமைப்பின் 140 ஆவது உறுப்புரையின் கீழ் மற்றும் ஏனைய வேறு வழிமுறைகளின் கீழும் உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு என்னால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (ஒ,5)

# முள்ளிவாய்க்காலில் முளைத்த சோதனைச் சாவடிகள்

## தீவிரமாகும் கெடுபிடிகள்!

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 11ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு அருகே, புதிதாக பொலிஸ், இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியில், முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு செல்லும் வீதியின் ஆரம்பத்தில், பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனைச் சாவடியில் கடந்த மூன்று நாள்களாக சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதிக்கு அண்மையாகவுள்ள ஆள்களில்லாத வீட்டில் புலனாய்வாளர்கள் தங்கியிருந்து கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு வருபவர்களை இவர்கள் கண்காணிப்பதுடன், ஒளிப்படம் எடுத்து, அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறும் அறிவுறுத்தி வருகின்றனர். முள்ளிவாய்க்கால் பிரதேசத்தின் தொடக்கமான, இரட்டைவாய்க்கால் பகுதியிலும், இராணுவ சோதனைச் சாவடி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனைச் சாவடியில் உள்ள படையினர், வீதியரல் செல்பவர்களை பதிவு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வட்டுவாகல் பாலத்துக்கு முன்பாக வழமைக்கு மாறாக அளவுக்கதிகமான படையினர் நிறுத்தப்பட்டு சோதனை சாவடி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாகவும், தகவல்கள் தெரிவிக்கின்றன.

முள்ளிவாய்க்காலில் தமிழினப் படுகொலையை நினைவுகூரும், நினைவேந்தல் நிகழ்வு கொரோனா சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடைபெறும் என்று நினைவேந்தல் குழு அறிவித்துள்ள நிலையில், இராணுவ மற்றும் பொலிஸ் கெடுபிடிகள் அந்தப் பகுதியில் அதிகரிக்கப்பட்டுள்ளது . (ஒ.5)

# 38 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இலங்கை திரும்பவுள்ளனர்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மே 18

எதிர்வரும் வாரங்களில் 143 நாடுகளில் தங்கியுள்ள 38 ஆயிரத்து 983 இலங்கையர்கள் நாடு திரும்பவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் 27 ஆயிரத்து 854 பணியாளர்களும் 3 ஆயிரத்து 78 மாணவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 4 ஆயிரத்து 400 பேர் குறுகிய கால விசாக்களின் மூலம் வெளிநாடுகளில் தங்கியுள்ளதோடு, 3 ஆயிரத்து 527 பேர் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

இது தவிர இரட்டைக் குடியுரிமை அல்லது வேறு காரணங்களால் தங்கியுள்ள 484 பேர் நாடு திரும்பவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (ஒ,5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நெருப்பாகி நிமிர்வோம்

முள்ளிவாய்க்கால் ஊழி நிகழ்ந்து 11 வருடங்கள் பறந்தோடிப் போய் விட்டன. ஆனால் இன்னமும் 2009 மே 18 இல் எந்தப் புள்ளியில் தமிழினம் நின்று கொண்டிருந்ததோ அதே புள்ளியில் தான் இன்னமும் தேங்கி நிற்கிறோம். எந்தவித முன்னேற்றமும் இல்லை. தடுப்பில் இருந்தவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு, சமூகத்தோடு ஒன்றிணைக்கப்பட்டதையும், குறிப்பிடத்தக்க அளவிலான காணி விடுவிப்பையும் வேண்டுமானால் முன்னேற்றமாக எடுத்துக்கொள்ளலாம். அவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் ஒரு 'தறுக்கணித்த' நிலையில் தான் நாம் இருக்கிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட எவரும் இன்னும் வீடு திரும்பவில்லை. அவர்களின் கதி என்னவென்றும் தெரியவில்லை. தங்கள் உறவுகளை மீட்பதற்காக , காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்படும் போராட்டமும் வருடக்கணக்காகத் தொடர்கிறதே தவிர சாதகமான எந்தச் சமிக்ஞையும் கிடைக்கவில்லை. அரசியல் கைதிகளின் நிலையும் அவ்வாறே. இன்னுமும் விசாரணையின்றி, எப்போது விடுதலை கிடைக்கும் என்பதே தெரியாமல் நான்கு சுவர்களுக்குள் தங்கள் உலகைக் குறுக்கிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம். அதை விடவும் முன்னாள் போராளிகள் பலரது வாழ்வு இன்னமும் கேள்விக்குறியிலேயே தொங்கிக் கொண்டிருக்கிறது.

இறுதிப்போரில் நடந்த அவலங்கள் பின்னர் காணொலிகளாகவும், புகைப்படங்களாகவும், பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீர் மொழிகளாகவும் உலகின் முன்னால் கொட்டிவைத்து நீதி கேட்டோம். அந்தச் சாட்சியங்கள் துயரேந்தி நிற்கும் இனமொன்றின் கலப்படமற்ற கதறல் என்பதும், அவற்றில் சொல்லப்பட்டதை விடவும் முள்ளிவாய்க்காலில் வரலாறுகாணாத இனப்படுகொலை ஒன்று அரங்கேறியது என்பதையும் உலகம் நன்கு அறியும். ஆனாலும் தனக்கு ஆதாயம் இல்லாததால் , எமக்கு நீதி வழங்க அவையும் பின்னடிக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமர்வில் மட்டும் , இலங்கையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, இனப்படுகொலை விவகாரத்தை அமெரிக்காவும் , அதன் பரிவார நாடுகளும் அவ்வப்போது பயன்படுத்துகின்றன. மற்றும்படி எமக்கான நீதி 'கோமா' நிலைக்குப் போய் பல வருடங்களாகி விட்டன.

இப்படிப்பட்ட சர்வதேசம் இனியும் எமக்கு நீதி தரும் என நம்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை. தமிழினம் தன் அடுத்த கட்டத்தை நோக்கி நகரவேண்டும். வேறுவகையான பொறிமுறைகளைக் கண்டுபிடித்து, கோமாவில் இருக்கும் நீதியைத் தட்டியெழுப்பி, முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக்கு இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைக்க வேண்டும்.ஆனால் அதுமட்டுமே அடுத்த கட்ட நகர்வாகாது. காணாமல் ஆக்கப்பட்டோரின் கதியை அறிதல், அரசியல் கைதிகளின் விடுதலையை உறுதி செய்தல், படைத்தரப்பிடம் எஞ்சியிருக்கும் காணிகளை விடுவித்தல், முன்னாள் போராளிகளுக்கும், போரால் வாழ்வு சிதைந்தவர்களுக்கும் அவர்களின் பொருளாதார பலத்தை அதிகரிக்கக் கூடிய வாழ்வாதாரத்தை ஏற்படுத்தல் என்பன இப்போதைக்கு முக்கியமானவை. இவற்றைச் செய்தால், இதுவரை நீடிக்கும் தேக்க நிலை மறைந்து, அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிப்பதற்கான வழி கிடைக்கும்.

ஆனால் இவையெல்லாம் நடக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில் முள்ளிவாய்க்காலில் நினைவு மண்டபம் ஒன்றை அமைக்க வடக்கு மாகாண சபையிலே 2015 ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனால் மாகாண சபையின் ஆயுள் முடிந்த பின், இன்னும் அதற்கான அத்திபாரம் கூட போடப்படவில்லை. ஒரு நினைவு மண்டபத்தை கூட இன்னும் அமைக்க முடியாத இனம், இனப்படுகொலைக்கு நீதியைப் பெற தொடர்ச்சியாகப் போராடும் என்பதும், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள், முன்னாள் போராளிகள் என்போருக்கு விமோசனத்தைப் பெற்றுக் கொடுக்கும் என்பதும் நம்பக் கூடியதாக இல்லைத்தான். ஆனாலும் நம்பத்தான் வேண்டும். ஏனெனில் நமக்கிருக்கும் ஒரேயொரு துரும்பு நம்பிக்கை மட்டுமே. எனவே அந்த நம்பிக்கைத்துளியை இன்றைய நினைவேந்தலாக்கி, பொது இடங்களில் அஞ்சலிக்கத் தடை என்பதால்,வீடுகளில் இருந்தாவது தீபமேற்றி இன்னும் எமது வலியையே எம்மினத்தின் அடுத்த கட்ட நகர்வுக்கான உரமாக்குவோம்.

"நெருப்பாகி, நெருப்பாகி, நெருப்பாகி நிமிர்வோம்"



'மே 18' முள்ளிவாய்க்கால் பேரவலத்தில்

# உயிர்நீத்த உறவுகளை சுடரேற்றி அமைதியாக நினைவுகூருவோம்!

### தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அழைப்பு



**கொழும்பு, மே 18**

**முள்ளிவாய்க்கால் மண்ணை அங்கு அரச படைகளால் அரங்கேற்றப்பட்ட பேரவலத்தை தமிழினம் ஒருபோதும் மறக்காது. தமிழினத்தின் உரிமைக்கான - இலட்சியத்துக்கான - விடுதலைக்கான போராட்டத்தில் முள்ளிவாய்க்கால் பேரவலம் ஆறாத வடுவாக இன்னமும் இருக்கின்றது. அந்தப் பேரவலத்தில் சாவைத் தழுவிய எமது உறவுகளை மே 18 இன்றைய தினம் எமது வீடுகளில் சுடர் ஏற்றி - அஞ்சலி செலுத்தி அமைதியாக நினைவுகூருவோம்.**

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

அவர் மேலும் கூறியதாவது:

இறுதிப் போரில் அரச படைகளின் பலவிதமான தாக்குதல்களினால் எமது உறவுகள் பலர் முள்ளிவாய்க்கால் மண்ணில் சாகடிக்கப்பட்டனர். சாட்சியங்கள் எதுவுமின்றி போர் விதிகளுக்கு முரணாக இறுதிப் போர் இந்த மண்ணில் நடைபெற்றது.

மஹிந்த ஆட்சியில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இந்த திட்டமிட்ட கொடூரத் தாக்குதல்கள் தொடர்பில் அப்போது நான் நாடாளுமன்றில் பல உரைகளை ஆற்றியிருந்தேன். போரை உடன் நிறுத்தும்படியும் ஆட்சியில் இருந்த அரசைக் கேட்டிருந்தேன். ஆனால், தமிழ் மக்களுக்கு பெரிய இழப்புகளைக் கொடுத்துத்தான் அரசு போரை முடிவுக்குக் கொண்டுவந்தது.

தமிழின அழிப்பு தினமாக வும், தமிழ்த் தேசியதுக்கு நாளாகவும் இன்றைய நாள் (மே 18) அறிவிக்கப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் வருடந்தோறும் நினை. வேந்தல் நிகழ்வு நடைபெறும். இதில் தமிழ் மக்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்று அனைத்துத் தரப்பும் ஒற்றுமையுடன் ஓரணியில் திரண்டு பங்கேற்பார்கள். ஆனால், நாட்டில் தற்போது உயிர்கொல்லி நோயான தொற்று நோயான கொரோனா வைரஸ் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்ற நிலையில் கடந்த வருடங்கள் போன்று இவ்வருடமும் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் அனைவரும் பங்கேற்று உயிரிழந்த எமது உறவுகளை நினைவுகூர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழர்கள் அனைவரும் இன்று மாலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையான காலப்பகுதியில் இறுதிப் போரில் இழந்த எமது உறவுகளை வீடுகளில் சுடர் ஏற்றி - அஞ்சலி செலுத்தி நினைவு கூர வேண்டும். இவ்வாறு நாம் செய்வதன் ஊடாக போரின்போது உயிரிழந்த எமது உறவுகளின் ஆத்மா சாந்தியடையும்" என்றார். (எ-22)

# எமக்காக இன்னுயிரைத் தியாகம் செய்தோருக்காக நீதி தேடுவோம்

### நினைவேந்தல் நாளில் உறுதி கொள்வோம் என்கிறார் முன்னாள் நா.உ. சரவணபவன்

யாழ்ப்பாணம், மே 18

நீதி தேடிய இந்த நெடிய, இடரிய பயணத்தில் ஒவ்வொரு தமிழனும் பங்கெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். எமது உறவுகளுக்காக - எமக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்களுக்காக, இந்தப் பேரவலத்தின் பின்னரும் எஞ்சியிருக்கும் நாம் தான் நீதி தேட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள் இன்றாகும். இதனை முன்னிட்டு அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர்களின் வாழ்வில் குருதி தோய்ந்த சரித்திரம் எழுதப்பட்ட நாள் இன்று. மனிதாபிமானத்துக்கான போர் என்று



பன்நாடுகளுக்கு பகிரங்க அறைகூவல் விடுத்து, ஒட்டு மொத்த தமிழினத்தையும் மனிதாபிமானமின்றி கொன்றொழித்த கொடுந் துயர் நாள். பன்நாட்டுச் சட்டங்கள் போர் விதிமுறை மீறல்கள் என்று எவற்றைப் பட்டியலிட்டுள்ளதோ அத்தனை மீறல்களையும் புரிந்து நடத்தப்பட்ட போர் முடிவுக்கு வந்த நாள்.

சாவுகளைக் கண்டு துவண்டு விடவில்லை. அவற்றிலிருந்து நாம் மீண்டு வந்திருக்கின்றோம். நினைவுகளை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த நினைவுகளினூடாக, முள்ளிவாய்க்கால் நிலப் பரப்பில் பறித்தெடுக்கப்பட்ட உயிர்களின் சாவுகளிற்கு நீதி தேடிய பயணத்தில் ஆக்ரோசமாகப் போராட வேண்டியிருக்கின்றோம். நீதி தேடிய இந்த நெடிய இடரிய பயணத்தில் ஒவ்வொரு தமிழனும் பங்கெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். எமது உறவுகளுக்காக - எமக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்களுக்காக, இந்தப் பேரவலத்தின் பின்னரும் எஞ்சியிருக்கும் நாம் தான் நீதி தேடவேண்டும். நீதிக்கான பயணத்தின் ஓர் அங்கமாக, நினைவேந்தல்களை கடைப்பிடிக்க வேண்டும். எமது தார்மீக கடமையைப் பிறர் மீது சுமத்துவதை விடுத்து சாக்குப் போக்குச் சொல்லி தட்டிக் கழிப்பதை விடுத்து, செவ்வனே நிறைவேற்ற வேண்டும். ஈழத் தமிழினம் தனது ஒன்றிணைந்த எழுச்சியை வெளிப்படுத்த, முள்ளிவாய்க்கால் மண்ணில் மூச்சடங்கியோருக்காக வீடுகளிலிருந்து நினைவுகூர வேண்டும் என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# தடைகளைத்தாண்டி அஞ்சலிப்பது ஒவ்வொரு தமிழனினதும் கடமை

## சர்வதேச இந்து இளைஞர் பேரவை அழைப்பு

வவுனியா, மே 18

**எமது இறந்த உறவுகளுக்காக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பல வகையிலும் தடுக்கப்படுகின்றது. ஆனாலும் எமது உறவுகளுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செய்ய வேண்டியது எஞ்சிய ஒவ்வொரு தமிழனின் கடமை என்று சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ் இனப்படுகொலை நடந்து பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்டன. வரலாற்றிலும் வாழ்விலும் ஒவ்வொரு தமிழனும் இறப்பதனை இந்த உலகம் வேடிக்கை பார்த்தது என்ற உண்மை உலகம் இயங்கும் வரை மறக்க முடியாத வடுக்களாகும்.

ஆண்ட எம் இனம், அநாதையாக்கப்பட்டு கேட்பாரின்றிக் கிடந்த எமினத்தின் வலிகளும் இழப்புக்களும் எமக்குத்தான் தெரியும். உலகின் ஒவ்வொருவரின் முகமும் எமக்கு உணர்த்தப்பட்ட நாள்கள். ஒன்றரை லட்சம் மக்கள் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டார்கள். எத்தனையோ படுகொலைகள் அரங்கேறின. யாரும் நீதி தரவில்லை. எம்மால் எவை முடியுமோ அவற்றை நாம் செய்யப்பழகிக் கொள்ள வேண்டும். இத்தனை காலமும் இல்லாது இந்தவருடம் பலகெடுபிடிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே எமது அன்பான உறவுகளே நாம் செய்யவேண்டியது எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்த உறவுகளை ஒரு நிமிடம் உணர்வுடன் விளக்கேற்றி அவர்களை நினைத்து அவர்களின் ஆன்மா ஆன்ம ஈடேற்றம் பெறவேண்டி ஆத்மார்த்தமான பிரார்த்தனைகள் செய்து கொள்ளுங்கள் என்று அனைத்து தமிழ் உறவுகளையும் உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்-என்றுள்ளது. (த-110)



# வவுனியா முகாமிலிருந்த 383 பேரும் வெளிவந்தனர்

வவுனியா, மே. 18

வவுனியா தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த 383 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமுக்கு கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கடற்படையைச் சேர்ந்த குடும்பத்தினர்கள் அழைத்துவரப்பட்டிருந்தனர்.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 400 க்கும் மேற்பட்ட கடற்படை சிப்பாய்களுக்கு கொரோனோ தொற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தநிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படைச் சிப்பாய்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள குறித்த முகாமுக்கு கடற்படைச் சிப்பாய்கள் மற்றும் அவர்களின் உறவினர்களென 190பேர் பேருந்துகளின் மூலம் அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கொவிட் 19 தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட 33 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை தமது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கொவிட் 19 வைரஸ் காரணமாக வவுனியா மாவட்டத்தில் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக 383 பேர் அழைத்துவரப்பட்டு, பம்பைமடு, பெரியகட்டு, வேலங்குளம் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் தனிமைப்படுத்திவைக்கப்பட்டிருந்தனர். தற்போது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த நிலையில் அவர்கள் அனைவரும் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (த-110)

# மேலும் 102 பேர் வீடு திரும்பினர்

கொழும்பு, மே 18

முப்படையினரால் நிர்வகிக்கப்படும் மேலும் சில நிலையங்களிலிருந்து 102 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி மீயான்குளம் 17பேர், மின்னேரியா 28பேர், அம்பாறை 15பேர், மற்றும் கடற்படை குடும்ப தனிமைப்படுத்தல் மையங்களில் 42 பேர் என்று தனிமைப்படுத்தல் மையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 102 பேர் பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் தனிமைப்படுத்தல் சான்றிதழ்களுடன் தங்கள் வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# மதகுருவுக்கு எதிராக மன்னாரில் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 18

விபத்தில் சகோதரிகள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், விபத்தில் சம்பந்தப்பட்ட சாரதியை பிணையெடுத்த மதகுருவுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மன்னார் மதவாச்சி பிரதான வீதி, பரப்பான் கண்டல் சந்தியில் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றிருந்தது. விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் வாகனத்தை செலுத்திவந்த நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது மன்னார் பங்குத்தந்தையின் தலையீட்டால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில்குறித்த இருசகோதரிகளின் இறப்புக்கும் நீதிவேண்டும் என்றுகோரி குடும்ப உறவுகள் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை அமைதியான முறை யில் தனியாள் இடைவெளிகளை பேணி கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது "மனிதாபிமானம் இல்லாத மத குருக்களே எங்கே உங்கள் மனிதாபிமானம், நீதி இன்னும் மரணிக்கவில்லை, நீதி தாருங்கள்" போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்துக்குச்சென்ற மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, "நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு மக்கள் ஒன்றுகூடி போராட்டத்தை முன்னெடுக்கமுடியாது. இந்த இடத்தை விட்டுச் செல்லுங்கள்." என்று கூறினார்.

எனினும், போராட்டத்தில் ஈடுபட்டோர் அந்தஇடத்திலிருந்து அகன்று செல்லாத நிலையில் பொலிஸாரின் உதவியுடன் போராட்டத்தில் ஈடுபட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என சுமார் 16 பேர் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார், இவ்வாறான போராட்டங்களை தற்போதைய சூழ்நிலையில் செய்ய முடியாது என்று எச்சரித்தார். உங்களின் பிரச்சினை தொடர்பில் மன்னார் நீதிமன்றின் உதவியை நாடுமாறும் கூறினார்.

மன்னார் அஞ்சல் அதிபராக கடமையாற்றிய சந்தியோகு றெறன்சியா(வயது-25), மருத்துவமனை பெண் பரிசாரகராக கடமையாற்றும் லின்றா கோபிநாதன் (வயது-42) ஆகியோரே விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

"விபத்தை ஏற்படுத்தினார் என்று கூறப்படும் நபர் கைதுசெய்யப்பட்டாரெனினும், விளக்கமறியல் இன்றி விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலம் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னரே பிணையில் விடுவிக்கப்பட்டார். எனவே உறவுகளாகிய எமக்கு எதுவித உதவிகளும் தேவையில்லை. உயிரிழந்த இரு சகோதரிகளுக்கும் உரிய நீதி கிடைக்க வேண்டும். இப்படியான ஒரு சம்பவம் இனி இடம்பெறக்கூடாது. பணம் இருந்தால் எதனையும் செய்யமுடியும் என்பதற்காக ஏழைகளுக்கு அநீதி இடம்பெறக்கூடாது. குறித்த இரு சகோதரிகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அவர்களின் குடும்ப உறவுகளாகிய நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்தோம்." என்று தெரிவித்தனர். (த-105)

# இருப்பிடங்களிலிருந்து நினைவேந்துவோம்

## தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம், மே 18


மே 18 முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 11ஆவது நினைவு தினத்தை தமிழ் தேசமும் உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளும் இன்று திங்கட்கிழமை நினைவேந்தவுள்ளன. வெற்றுக் கோசமாகிப்போன பொறுப்புக்கூறல், சர்வதேச விசாரணை மற்றும் உலகப் பெரும் தொற்றாகிய கொரோனோ என்பனவற்றுக்கிடையில் நாம் இந்தமுறை இந்த நினைவு தினத்தை எதிர்கொள்கின்றோம்.

தமது சுதந்திரமான வாழ்வியலுக்காகவும் விடுதலைக்காகவும் போராடிய தமிழ் மக்களின் மூன்று தசாப்தகால விடுதலைப்போர், பல்லாயிரம் மக்களின் சாட்சிகளற்ற படுகொலைகளோடு மௌனிக்கப்பட்டு 11 ஆண்டுகள் எந்தவிதமான காத்திரமான அரசியல் தீர்வுகள் இன்றி கடந்துவிட்டது. 2009 மே மாதம் 18ஆம் திகதியில் இந்த விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்படுவதாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் தமிழர் தாயகப் பகுதியில் பல இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வன்னி பெரு நிலப்பரப்பில் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் குறுகிய நிலப்பரப்புக்குள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு குண்டுவீச்சுக்களாலும் எறிகணைகளாலும் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். அந்த நாள்களில் ஒருவேளை உணவுக்காக கஞ்சியுடன் உயிரைக் கையில் பிடித்தபடி தமிழ் மக்கள் பட்ட சொல்லொணாத் துன்பத்தை வார்த்தைகளால் வடிக்க முடியாது. இந்த வகையில் வருடா வருடம் மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலானது தமிழ் மக்களால் பேரெழுச்சியாக உணர்ச்சியுடன் நினைவு கூரப்பட்டு வருகின்றது. இந்தமுறையும் தமிழ் மக்களாகிய நாம் கொரோனா இடர்கால நிலைமையைக் கருத்திற்கொண்டு எமது வீடுகளில் இருந்தவாறே இந்த நினைவேந்தலை இன்று அனுஷ்டிக்க வேண்டியுள்ளது.

உலக வரலாற்றில் பொறுப்புக்கூறலுக்காக பல இனங்கள் சமூகங்கள் நீண்டகாலம் காத்திருக்க போராட வேண்டியிருந்தமை கண்கூடு. அதேபோலவே நாமும் எமக்கான நீதி கிடைக்கும்வரைக்கும் காத்திருக்கவும், கிடைக்கின்ற அனைத்து சந்தர்ப்பங்களையும், வளங்களையும் சிறந்தமுறையில் பயன்படுத்தி மாறுகின்ற பூகோள ஒழுங்குக்கமைய அகிம்சை வழியில் போராடவும் வேண்டும். இதை அடையும்வரையும் இனத்துக்கான வலிமிகுந்த நாள்களில் தமிழ் மக்கள் பட்ட வலிகளின் அடையாளமாக ஒருவேளை உணவாக கஞ்சியைக் குடித்து அந்த மக்கள் அன்றைய நாள்களில் பட்ட துன்பத்தை நினைவுகூர்வதுடன் இன்று மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையான காலப்பகுதியில் சுடரேற்றி நினைவேந்தல் மேற்கொள்ளுமாறும் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (த)

# ஒரு நாள் சம்பளத்தை வழங்கல் முப்படையினருக்குப் பொருந்தாது

## பாதுகாப்புச் செயலர் அறிவிப்பு



கொழும்பு, மே 18

**கொரோனா வைரஸால் ஏற்படும் நிதிச் சிக்கல்களை சமாளிக்க அரச ஊழியர்களால் ஒரு நாள் சம்பளத்தை வழங்கும் நடவடிக்கையில் முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு பொருந்தாது என்று பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தொற்று நோயால் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக அரசு நிதி சிக்கல்களை எதிர்கொள்கிறது என்று கடந்த வாரம் ஜனாதிபதியின் செயலர் கலாநிதி பி.பீ.ஜெயசுந்தர அறிவித்தார். அரசு ஊழியர்களை தமது மே மாத சம்பளத்தை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய நிதியத்துக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த வேண்டுகோளைத் தொடர்ந்து, அமைச்சுகள் அனைத்து நிறுவனத் தலைவர்களுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளதுடன், தற்போதைய நிதி சிக்கல்களை சமாளிக்க அவர்களின் ஊழியர்களின் மே சம்பளத்தின் ஒரு பகுதியை, அரை வாரம், ஒரு வாரம் அல்லது ஒரு நாளைக்கு நன்கொடையாக வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இதன்படி முப்படைகள் மற்றும் பொலிஸாரிடமிருந்து ஒரு நாள் சம்பளத்தைக் கழிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது என்று சமூக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தக் கூற்றை நிராகரித்த மேஜர் ஜெனரல் குணரத்ன, இந்த கோரிக்கை முப்படைகள், மாலுமிகள், விமான வீரர்கள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பொருந்தாது என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

# சௌபாக்கியா திட்ட முன்னேற்பாடுகள் யாழ்.செயலக விவசாயப் பிரிவு அறிக்கை

கொடிகாமம், மே 18

நாட்டில் தற்போதைய நிலையில் விவசாயத் துறையை மேம்படுத்தும் முகமாக அரசாங்கத்தால் நாடு பூராகவும் முன்னெடுக்கப்படும் "சௌபாக்கியா" வேலைத் திட்ட முன்னே ற்பாடுகள்தொடர்பாக யாழ் மாவட்ட செயலக விவசாய பிரிவினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தால் 14ஆயிரத்து 500 நாற்று விதைப் பைக்கற்களும், மாகாண விவசாய விரிவாக்கல் திணைக்களத்தால் 10ஆயிரம் நாற்று விதைப்பக்கெற்களும் தலா 20 ரூபா வீதம் வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. மேலும் யாழ். மாவட்ட விவசாய பிரிவினரால் 750 நாற்றுக்களும் கமநல சேவை திணைக்களத்தால் 3,400 நாற்றுக்களும் (கத்தரி, கறிமிளகாய், மிளகாய்) பிரதேச ரீதியில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு. சௌபாக்கியா உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் தேசிய உணவு உற்பத்தி செய்யும் நோக்கில் யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் விவசாய பயனாளிகளுக்கு மார்ச் 15 முதல் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் பயிர்ச் செய்கை செய்யப்படும்16 உபஉணவுப் பயிர்களுக்கான விதை மானியங்கள் வழங்கப்படவுள்ளன. இவ் விதை மானியங்களுக்கான விண்ணப்பங்களை பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரிடம் மே மாதம் 20ஆம்திகதிக்குமுன்னர் விவசாயப் பயனாளிகள்சமர்ப்பித்தல்வேண்டும். உப உணவு பயிர்ச்செய்கையில் சோளம், பயறு,உழுந்து, கொள்ளு, சோயா, கௌப்பி, எள்ளு, நிலக்கடலை, குரக்கன், பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், மிளகு, உருளைக் கிழங்கு, மஞ்சள், இஞ்சி, வெள்ளைப்பூடு ஆகிய விதைகள் மானியங்களாக வழங்கப்படவுள்ளன. அத்துடன் சிறுபோக உப உணவுத்திட்டத்தில் 1/4 - 1/2 ஏக்கர்களில் பயிரிடும் விவசாய பயனாளிகளுக்கு முழு விதை மானியங்களும்1/2 - 5 ஏக்கர்களில் பயிரிடும் விவசாய பயனாளிகளுக்கு 50 வீத மானியங்களும் வழங்கவுள்ளது என்று மாவட்ட விவசாய அலகுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளார்கள். அத்தோடு இத் திட்டத்தில் விவசாயிகளால் அடையாளப் படுத்தப்பட்ட இடங்களில் உள்ள பயிர்களின் அடர்த்தி, வளர்ச்சி ஆகிய வற்றை விவசாயப் போதனாசிரியர்கள் பார்வையிட்டு குறித்த மானியங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் குறித்த அறிவுறுத்தல்களைக் கருத்தில்கொண்டு விவசாய பெருமக்கள் தமக்குரிய விவசாய உதவிப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும் -என்றுள்ளது. (ஐ-159)



# இன்று மின்தடை

யாழ்ப்பாணம், மே 18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று திங்கட்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** அராலிப் பிரதேசம், செட்டியார்மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் ஆலயம்,

அராலி ஐயனார் கோலிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை ஆகியஇடங்களிலும் **வவுனியா மாவட்டத்தில்** துட்டுவாகை, கிறிஸ்தவ குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் மாவட்டத்தில்** வட்டுபித்தன்மடு, புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலுமம் மின்சாரம் தடைபபடும்.


இதேவேளை இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீச்சரம் வரை,வங்காலை பிரதேசம்,சீ னத்துறைமுகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)



# நாற்று நடும் இயந்திரம் மூலம் முல்லைத்தீவில் நெற்செய்கை

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளின் நெற்செய்கை நடவடிக்கையை இலகுபடுத்தி அதிக வருமானத்தைப்பெற்றுக்கொள்ளும் நோக்கில் முதற்கட்ட நடவடிக்கையாக இயந்திரத்தைப் பயன்படுத்தி நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொல்லவிளாங்குளம் விவசாய போதனாசிரியர் ஏ.கீர்த்தி தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
நீரை வினைத் திறனாகப் பயன்படுத்தி விவசாயச் செய்கையை மேற்கொள்வதற்காக நெல் நாற்று நடும் இயந்திரத்தின் மூலம் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கொல்ல விளான்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவில் 2 ஏக்கர் நிலத்தில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது. களைகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஊடுகளை கட்டுப்படுத்தியும் நடுகையின் பின்னர் 14 மற்றும் 24 நாள்களில்பிரயோகிக்கப்பட்டது. கிராமத்தில் உள்ள நாற்று நடுகை இயந்திரம் மற்றும் ஊடுகளைக் கட்டுப்படுத்தியை இளைஞர் விவசாய கழக உறுப்பினர்கள் இயக்கி வருகின்றனர். ஒரு நாளில் 3 ஏக்கர் தொடக்கம் 4ஏக்கர் வரை இயந்திரம் மூலம் நடுகை செய்யக்கூடிய வகையில் இந்த இயந்திரம் காணப்படுகின்றதாக விவசாய போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.
பாரம்பரிய முறைப்படி வீசி விதைப்பதற்கு 4060 கிலோகிராம் விதை நெல்லை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் நாற்று நடும் இயந்திரங்களை பயன்படுத்திநடும்போது 1215கிலோகிராம் விதை நெல் போதுமானதாக காணப்படுகின்றது. நாற்று நடும் இயந்திரத்தின் மூலம் விவசாயிகள் அடையக்கூடிய நன்மைகளாக வீசி விதைத்தலுடன் ஒப்பிடும்போது உயர் விளைச்சல், மிகக் குறைந்த விதை நெல் போதுமானது, சீரான பயிர் இடைவெளி, சரியான பயிர் அடர்த்தியையும் பேண முடியும், நோய் பீடைத் தாக்கம் குறைவு, உரிய காலத்தில் நாற்றுகளை நடுகை செய்யலாம், ஓரலகுக்கான உற்பத்திச் செலவு குறையும், வரிசைக்கிடையில் களைகட்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி களைகட்டலாம், விவசாயியின் தேறிய வருமானம் அதிகரிக்கும் மேலும் விளைச்சலை அதிகரிப்பதற்கு திரவ பசளையாகவும் பூச்சி விரட்டியாகவும் சங்ஸ்தா பயன்படுத்தப்படுகின்றது (16லீற்றர் நீருக்கு 100மில்லி லீற்றர் அளவில்)- என்றார் (ஐ-19)

## ஆனல்ட் தேர்தலில் குதிப்பதால் ஈசன் வசமாகின பொறுப்புக்கள்

யாழ்ப்பாணம், மே 18
நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட் இரண்டு மாதங்களுக்கு பின்பு தன்னிடம் அனைத்து பொறுப்புக்களையும் ஒப்படைத்துள்ளார் என்று யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாநகர சபையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஈசன் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை அனைத்து உறுப்பினர்களையும் அழைத்து தனக்கு கீழ் உள்ள அதிகாரங்கள் அனைத்தையும் பதில் முதல்வரான என்னிடம் ஒப்படைத்துள்ளார்.
மார்ச் மாதம் 17 ஆம் திகதி நாடாளுமன்ற பொதுத் தேர்தலிலே முதல்வர் இ.ஆனல்ட் தனது வேட்புமனுவிலே ஒப்பமிட்டதன் பின்பும் தன்னுடைய அதிகாரங்கள் ஊடாக, அதாவது அதிலே சொல்லப்பட்ட விடயம் என்னவென்றால் முதல்வர் முதல்வராகவே இருந்துகொண்டு நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடலாம், அந்த சட்டதிட்டங்கள் எங்களுக்கும் தெரியும் அவர் செய்ததும் சரியானது.
இப்படியாக தொடர்ச்சியாக முதல்வர் செயற்படும் போது தேர்தல் திணைக்களத்தினால் மூன்று கடிதங்கள் மாநகர சபைக்கு வந்துள்ளன. உடனடியாக நீங்கள் விடுமுறையைப் பெற்று உங்களுடைய கடமைகளை ஒப்படைத்து இந்தப் பணியை ஆற்ற உதவி செய்யுமாறு அந்தக் கடிதங்களில் கேட்டுக்கொள்ளப்பட்டது.
இதற்கமைவாக இரண்டு மாதங்களுக்குப் பின்பு நேற்று(நேற்றுமுன்தினம்) அவர் பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளார். இந்த இடைப்பட்ட காலத்தில் முதல்வர் முதல்வராகச் செயற்பட்டது உண்மை, நான் பிரதி முதல்வராகத்தான் செயற்பட்டிருந்தேன். ஆனால் முதல்வர் எந்த விடயங்களைச் செய்ய வேண்டுமோ அந்த விடையங்களைச் செய்துவிட்டார். தன்னுடைய வாகனங்கள் உள்ளிட்ட சகலதையும் ஒப்படைத்து விட்டுச்சென்றுள்ளார்.
அதற்கு பின்பு உறுப்பினர்கள் மற்றும் மக்கள் அடுத்து நீங்கள் தானே முதல்வர். என்ன செய்யப் போகின்றீர்கள் என என்னைக் கேட்பார்கள். ஆனால் துணை முதல்வராக இருந்த காரணத்தினால் என்னாலான சில செயற்பாடுகளை செய்வதற்கு பல தடைகள் இருந்தது.
தற்போது முதல்வர் எனக்கு பூரண அதிகாரங்களை ஒப்படைத்துள்ளார். கடந்த மாதம் 21 ஆம் திகதி சபையின் கூட்டத்தை கூட்டுமாறு முதல்வரால் எனக்கு கடிதம் வழங்கப்பட்டது. அதில் உண்மைத் தன்மை என்னவென்றால் அந்த கூட்டம் கூட்டுவதற்கும், நடத்துவதுக்கும் பதில் முதல்வருக்கு சட்டத்தில் இடம் உண்டு. ஆனால் பிழையாக அதனை எடுத்துக் கொண்டுள்ளனர். உண்மையில் முதல்வர் கடிதம் தராமலேயே கூட்டத்தை நடத்துவதற்கு அதிகாரங்கள் இருக்கின்றது.
தற்போது முதல்வரால் எனக்கு பூரண அதிகாரம் தரப்பட்டு சகலதையும் ஒப்படைத்துள்ளார். இனிவரும் காலங்களிலே கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று அனைத்து உறுப்பினர்களுடனும் இணைந்து மாநகர மக்களுக்காக சேவையாற்ற தோழமையுடன் கைகோர்த்துச் செய்யவேண்டும் - என்றார். (ஐ)

## மக்களைக் காக்க வைத்து படையினருக்கு பேருந்துச் சேவை

யாழ்ப்பாணம்,மே 18
விடுமுறையில் செல்லும் படையினரை ஏற்றிச் செல்ல அதிக பேருந்துகளை எடுத்துச் சென்றமையினால் பேருந்து நிலையங்களில் மக்கள் காத்திருந்து ஏமாந்து வீடு திரும்பிய சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.
இ.போ.சபையின் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்து வழமையாக 5.30 மணி முதல் பயணிக்கும் பேருந்துகளிற்காக அதிக மக்கள் கூடுவர். ஊரடங்குச் சட்டம் தளர்த்த ப்பட்ட போது நேற்றுமுன்தினம் 6 மணியளவில் பிற மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள், ஊழியர்கள், அதிகாரிகள் என முச்சக்கர வண்டிகளிலும் நண்பர்களின் உதவியுடனும் பேருந்து நிலையத்தை அடைந்து பேருக்குக்காக காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஒரு சில பேருந்துகளே சேவையில் ஈடுபட்டன.
இதனால் 6 மணியில் இருந்து 8 மணிவரை காத்திருந்த மக்கள் அதன் பின்பு பேருந்துச் சாலை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அதிக பேருந்துகள் நேற்றையதினம் படையினரின் பயன்பாட்டிற்காக சென்றமையினால் நெருக்கடி நிலவுதாக தெரிவித்துள்ளனர்.
இதையடுத்து முரண்பாடுகளின் மத்தியில் பல உத்தியோகத்தர்கள் வீடுகளுக்கு திரும்பிச் சென்றதோடு மேலும் பல உத்தியோகத்தர்கள் தவிர்க்க முடியாத நிலைமையில் தனியார் போக்குவரத்துச் சேவைகளை தயார் செய்து அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பில் இ.போ.ச அதிகாரிகளை தொடர்பு கொண்டுகேட்டபோதுநீண்ட நாள்களாக கொரோனாவின் காரணமாக படையினர் விடு முறையில் செல்லவில்லை எனவும் நேற்றையதினம் பலர் பயணிப்பதால், 70 பேருந்துகளை படையினர் பெற்றுவிட்டனர். இதன் காரணமாகவே நெருக்கடி ஏற்பட்டது என்றனர். (ப-105)

## பொதுப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த செயலணி

கொழும்பு,மே 18
கொரோனாத் தொற்றை முழுமையாகக் கட்டுப்படுத்தும் வரை பொதுப் போக்குவரத்துச் சேவையை ஒழுங்கான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு செயலணியை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.
பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வடிவமைத்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் போன்றவற்றை இந்தச் செயலணிக் குழு மேற்கொள்ளும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (க)

## கனமழையால் மின் துண்டிப்பு

நாட்டில் பெய்துவரும் கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.
காலி, களுத்துறை, கேகாலை, ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதியில் உள்ள சுமார் 45 ஆயிரம் பாவனையாளர்கள் மின்சாரத் தடைக்கு முகங்கொடுத்துள்ளதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (ப)

## வாகனத் தரிப்பிடத்தை வழங்கினால் இருப்பிடத்தை விட்டு வெளியேறலாம்

### மன்.தனியார் வாடகை சங்கம் தெரிவிப்பு

மன்னார், மே 18
மன்னார் தனியார் வாடகை சங்கம் எந்தவிதத்திலும் மன்னார் நகர அபிவிருத்தி திட்டத்துக்கு இடையூறாக இருக்காது. மன்னார் நகர சபையானது மன்னார் தனியார் வாடகை வாகன உரிமையாளருக்கு அவர்களின் வாகனங்களை நிறுத்தி தொழிலை மேற்கொள்ளக் கூடிய சரியான இடத்தை வழங்கும்போது அவர்கள் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் இடத்திலிருந்து நகர்ந்து செல்ல தயாராக இருப்பதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.
மன்னார் மாவட்ட தனியார் வாடகை போக்குவரத்து சங்கத்தின் கோரிக்கைகளை உதாசீனம் செய்த மன்னார் நகர சபைத் தலைவர் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போது சட்டத்துக்கு முரணான முறையில் அவரின் குழுவினருடன் சென்று சங்கத்தின் கட்டடத்தை தரைமட்டமாக்கியதுடன், சொத்துகளுக்கும் சேதத்தை ஏற்படுத்தினார் என்று தெரிவித்து மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் விசாரனைக்கு எடுக்கப்பட்டது.
இதன்போதே வழக்காளிகள் சார்பாக மன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட கட்டாணைப்படி எதிர்வரும் 22.05.2020 வரை இவ் வழக்கு விசாரனைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. (ப-60)

# சுகாதாரத்துறை உத்தரவாதம் தேர்தலை நடத்த அவசியம்!

## ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

**கொழும்பு, மே 18**

**சுகாதாரத் துறையினரின் உத்தரவாதமின்றி பொதுத் தேர்தலையோ, நாட்டின் ஏனைய நடவடிக்கைகளையோ முழுமையாக முன்னெடுக்க முடியாது. இந்த நிலையில் நாடு தற்போது எதிர்க்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து முதலீட்டாளர்கள் அச்சப்படும் வகையில் ஜனாதிபதியின் செயலாளர் வெளிப்படையாக அறிவித்தமை தவறாகும் இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் முன்னாள் அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பொதுத்தேர்தல் குறித்த கலந்துரையாடல்களில் ஈடுப்பட்டனர். இந்த கலந்துரையாடல் கொழும்பு 7,5 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டில் இடம்பெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை சமாளித்துக்கொள்ள சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. கொவிட்19 வைரஸ் அச்சுறுத்தல் குறைந்துள்ளதாக சுகாதாரத்துறை உத்தரவாதம் இன்னும் அளிக்கவில்லை. ஊரடங்குச் சட்டம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனவே புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு அல்லாது இந்தப் பிரச்சினையிலிருந்து மீள இயலாது .

கொவிட் 19 வைரஸின் பின்னர் புதியதொரு சூழலே உருவாகப் போகிறது. அதற்கு ஏற்றவாறு எமது சட்டத்திட்டங்களும் புதுப்பிக்கப்பட வேண்டும். எதிர்வரும் ஜுன் மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவது என்பது சாத்தியமற்ற விடயமாகும். அதே நிலைப்பாட்டில் தான் ஜனாதிபதியும் உள்ளார் என்றே அறிகிறேன். பெரும்பாலும் ஓகஸ்ட் மாதத்தில் தேர்தலை நடத்தக் கூடிய வாய்ப்புகளே அதிகம் உள்ளன. சுகாதாரத்துறை உத்தரவாதம் அளிக்காமல் தேர்தல் ஆணைக்குழுவினால் திகதியை தீர்மானிக்க இயலாது .

எவ்வாறாயினும் அரசாங்கத்திடம் தற்போது நிதிப் பற்றாக்குறை உள்ளது. அரச ஊழியர்களின் விருப்பமின்றி சம்பளத்தின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது. ஆனால் நெருக்கடியைச் சமாளித்துக் கொள்ள அரச ஊழியர்களின் மாதச் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளவே முயற்சித்தது.

அந்த முயற்சி சாத்தியப்பட்டிருந்தால் மே மாதச் சம்பளத்தை வழங்குவதில் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டிருக்காது. பாரியதொரு அரசியல் நெருக்கடியில் தான் நாடு உள்ளது.

எதிர்காலத்தில் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம். நாட்டில் பொருளாதார நெருக்கடி உள்ளதென்பதை ஜனாதிபதி செயலாளர் வெளிப்படையாக அறிவித்தது தவறு. ஏனெனில் முதலீட்டாளர்கள் அச்சமடைந்து பின்வாங்கி விடுவார்கள். பங்குச் சந்தை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்திருக்க வேண்டும். உரிய திட்டமில்லையென்றால் பொதுத் தேர்தலின் பின்னரான நிலைமை மிகவும் மோசமானதாகவே அமையும். சர்வதேச நாணய நிதியத்திடமும் கடன் பெற கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றது. இராணுவ அதிகாரிகளை செயலாளர்களாக நியமிப்பது அரச நிர்வாகத் துறையில் பாரிய நெருக்கடியைத் தோற்றுவிக்கும். சுகாதார அமைச்சின் செயலாளரில் பிரச்சினை இருந்திருந்தால் அதற்குப் பதிலாக மற்றுமொரு சிவில் நிர்வாகத் துறை அதிகாரியை நியமித்திருக்க வேண்டும். தற்போது நியமிக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரியின் தகமை குறித்து எமக்குச் சிக்கல் இல்லை. ஆனால் அவர் இராணுவ அதிகாரியாகவே செயற்படுவார். இது பிரச்சினையைத் தோற்றுவிக்கும். என்றார். (ப)

# அருகில் உள்ள பாடசாலைகளில் உள்ளக கற்கையை தொடரலாம்

## தே.க.கல்லூரி மாணவர்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

தேசியக் கல்வியியல் கல்லூரிகளில் படித்து உள்ளகக் கற்கையை மேற்கொள்ளவுள்ள மாணவர்கள் தாம் வசிக்கும் இடத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலையில் ஓராண்டு காலத்துக்குக் கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. உள்ளகக் கற்கையை மேற்கொள்ளவுள்ள மாணவர்கள் தமக்கு அருகில் உள்ள பாடசாலை, வலயக் கல்வி அலுவலகம், ஆசிரியர் மத்திய நிலையம், போன்றவற்றின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகளால் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் ஆரம்பிக்கும் காலத்தில் அருகில் உள்ள பாடசாலையில் தமது உள்ளகக் பயிற்சியினை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விவரங்களை தேசியக் கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-9)

# வளி மாசடைவு வீதம் மீண்டும் உயர்வு



கொழும்பு, மே 18

நாட்டில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர், வளி மாசடைவு வீதம் மீண்டும் உயர் மட்டத்தை அடைந்துள்ளது.

ஊரடங்குச் சட்ட அமுலாக்கத்தின் காரணமாக, வாகனங்கள் பயணிக்காமை மற்றும் கைத்தொழிற்சாலைகள் இயங்காமை என்பன காரணமாக வளி மாசடைவு வீதம் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த நிலையில் தற்போது குறித்த நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் வளி மாசடைவு அதிகரித்து வருவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்படி, கொழும்பில் தற்போது வளி மாசடைவு தன்மையானது 50 வீதமளவில் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ப)

# ஆடுகள் திருட்டு ஒருவர் மாட்டினார்

கிளிநொச்சி, மே 18

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்ணகி நகரில் ஆடுகளைத் தொடர்ச்சியாகத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை ஆடுகளை மூவர் திருட முற்பட்ட வேளை, கிராமத்தினர் அவர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்தனர். இருவர் தப்பியோடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். தப்பி ஒடியவர்களைக் கைது செய்ய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (க-113)

# காரைநகர் பாலம் அகலிக்கப்பட்டு அணைச்சுவர் அமைக்க வேண்டும்

## காரைநகர் தவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 18

ஒரு வருடத்தில் இரண்டு பாரிய விபத்துக்களைச் சந்தித்த காரைநகர் கடல் சுழ்ந்த பால வீதி, உடன் அகலிக்கப்பட்டு, பாதுகாப்பு அணைச்சுவர் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்று காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான காரைநகர் மானிப்பாய் யாழ் (ஏபி17) வீதியான கடலை ஊடறுத்துச் செல்லும் பொன்னாலைப் பால வீதி தொடர்பாக தவிசாளர் கேதீஸ்வரதாஸ் மேலும் தெரிவித்ததாவது;

இரு பக்கமும் கடல் கொண்ட பொன்னாலைச் சந்தி முதல் வலந்தலைச் சந்தி வரையிலான 2.5 கிலோ மீற்றர் நீளமான மிக ஆபத்தான பாதுகாப்பற்ற வீதியின் இருபக்கமும் முறையான பாதுகாப்பு அணைச்சுவர் இன்றி பொருத்தமான தொழில்நுட்ப பிரயோகமின்றி கடந்த காலத்தில் வீதி சீரமைக்கப்பட்டுள்ளது. தற்போது வீதியின் அகலம் போக்குவரத்துக்குப் போதுமானதாகவில்லை. அத்துடன் அதனை விடப்பாரிய பிரச்சினையாகவுள்ளது வீதியின் இருபக்கமும் பொருத்தமான அணைச்சுவர் இல்லாமை. கடந்த சொற்ப காலங்களில் மட்டும் காரைநகர் பால வீதியில் டிப்பர் ஒன்றும் அதன் பின்னர் பஸ் ஒன்றுமாக இரு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறாக வீதியின் இருமருங்கிலும் பொருத்தமான அணைச்சுவர் அமைத்து வீதியின் பாதுகாப்பான போக்குவரத்து நிகழ யாழ். மாவட்டச் செயலர் உடன் சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு திட்ட முன்வரைபைச் சமர்ப்பிக்க முன்ர வேண்டும். இதேவேளை யாழ் கிளிநொச்சி குடிதண்ணீத் திட்டத்தின் கீழ் வீதியின் ஓரமாக கடலுக்குள் பொருத்தப்பட்டுள்ள பாரிய குடிதண்ணீர் குழாய்கள் இரு தடவைகள் பெருஞ் சேதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது - என்றார். (ப-50)

# சமூக இடைவெளியின்றி இரு பெரும் சந்தைகள்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 18

வலி.தெற்கு மருதனார்மடம், சுன்னாகம். ஆகிய சந்தைகளில் கொவிட் 19 பாதுகாப்பு முறைகளோ மற்றும் சமூக இடைவெளிகளோ பேணப்படாது சந்தைச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

நாட்டில் கடந்த திங்கட்கிழமை முதல் ஊடரங்கு தளர்வுபடுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையில் கணிசமான பணிகள் செயற்படத் தொடங்கிய நிலையில் சுன்னாகம் மற்றும் மருதனார்மடம் சந்தைகளின் செயற்பாடுகள் பகுதியளவில் இடம்பெற்று வருகின்றன. இருசந்தைகளிலும் கொவிட் 19 பாதுகாப்பு முறைமைகள் மற்றும் சமூக இடைவெளிகள் பேணப்பாடமை குறித்து பலராலும் சுட்டிக்காட்டியுள்ளதை அடுத்து, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினர் இவ்விடயம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கும் இச் சந்தைகளைப் பரிபாலனம் செய்யும் வலி தெற்கு பிரதேச சபைக்கும் எழுத்து மூலம் தமது அதிருப்திகளை தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை குடாநாட்டில் மிக முக்கிய சந்தைகளில் வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட இவ் இருசந்தைகளுக்கும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்தும் சந்தை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் சந்தையின் நெரிசல்களைக் கட்டுப்படுத்தாதும், சமூக இடைவெளிகளைக் கடைப்பிடிக்காமலும் முகக் கவசங்களை அணிவதில் அக்கறை காட்டாதும், கைகளைக் கழுவுதலுக்கு முக்கியம் கொடுக்காது இருப்பதையும் சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-39)



# தேர்தலை சவாலுக்கு உட்படுத்தும் மனுக்களை ஏற்பதா? இல்லையா?

## உயர் நீதிமன்றில் முழுமையான ஆயம் முன்னிலையில் இன்று விசாரணை

கொழும்பு, மே 18

நாடாளுமன்றத் தேர்தலை ஜூன் 20 ஆம் திகதி நடத்தும் தீர்மானம் மற்றும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்த தீர்மானம் ஆகியவற்றை வலுவிழக்கச் செய்யக் கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், அது சார்ந்த இடையீட்டு மனுக்கள் ஆகியவற்றை விசாரணைக்கு ஏற்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க அந்த மனுக்கள் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

உயர் நீதிமன்றில் இன்று காலை 10.30 மணிக்கு ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. நீதியரசர்களான விஜித் மல்கொட, புவனேக அளுவிஹார, சிசிர டி ஆப்றூ மற்றும் பிரியந்த ஜயவர்தன ஆகியோர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்பே இந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்படவுள்ளன. இன்றும், நாளையும் மனுக்களை பரிசீலனை செய்ய ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 11 ஆம் திகதி சட்டத்தரணி சரித்த குணரத்ன, சட்டத்தரணி இப்பத் சஹாப்தீன் ஊடாக தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றில் பரிசீலனைக்கு வந்தது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ள மனுதாரர்களின் சட்டத்தரணிகளும், அம்மனுக்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 8 இடையீட்டு மனுக்களின் சட்டத்தரணிகளும் முன்வைத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இன்றும், நாளையும் இது குறித்த அனைத்து மனுக்களையும் பரிசீலிக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

மனுதாரர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ராம் மொஹமெட், மூத்த சட்டத்தரணி சுரேன் பெர்ணான்டோ, மூத்த சட்டத்தரணி விரான் கொரயா ,ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் வாதங்களை முன்வைக்கவுள்ளனர்.

மனுக்களின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் சார்பில் சட்ட மா அதிபர் முன்னிலையாகவில்லை என்பதால் அவர்கள் சார்பில் தனிப்பட்ட சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகவுள்ளதாக அறிய முடிகிறது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் உறுப்பினர் அபயசேகர சார்பில் சட்டத்தரணி சாலிய பீரிஸும், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ண ஜீவன் ஹுலின் சார்பில் சட்டத்தரணி தெய்வேந்திரவும் முன்னிலையாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**வழக்கு**

அரசமைப்பின் பிரகாரம், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்திலிருந்து 3 மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டு புதிய நாடாளுமன்றம் கூட்டப்படல் வேண்டும். அதன்படி கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி அப்போதைய நாடாளுமன்றத்தை கலைத்து வர்த்தமானி அறிவித்தல் பிறப்பித்த நிலையில், அதில் ஏப்ரல் 25 ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெறும் என்று திகதி குறிக்கப்பட்டிருந்தது. கொரோனா நிலைமை காரணமாக ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடாத்த முடியாமல் போனதுடன், தேர்தல் திகதியை எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதிக்கு பிற்போட தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானித்தது. ஜூன் 20 ஆம் திகதிக்கு பொதுத் தேர்தல் திகதியை நிர்ணயம் செய்தமை அரசமைப்புக்கு முரணானதாகும். நாடாளுமன்றத்தைக் கலைத்து 3 மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றத்தை கூட்ட முடியாமல் போனமை ஊடாக, ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டத்தின் முன்னர் வலுவிழந்ததாக அறிவிக்க வேண்டும். அத்துடன் ஜூன் 20 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடாத்துவது குறித்தான தேர்தல்கள் ஆணைக் குழுவின் வர்த்தமானியையும் வலுவிழக்கச் செய்தல் வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் அனைத்திலும் சுட்டிக்காட்டப்பட்டு தேர்தல் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க இடைக் கால தடை உத்தரவுகளும், இரு வர்த்தமானிகளுக்கு எதிராக தடை உத்தரவுகளும் கோரப்பட்டுள்ளன. (ஒ,5,44)

## மே 18...

உறவுகள் வீழ்த்தப்பட்ட - மாண்ட இந்த நாளில் அவர்களை நினைந்துருகி, அவர்களுக்கான நீதியைத் தேடி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் இன்று கடைப்பிடிக்கப்படுகின்றது.

தமிழர் தாயகத்தில் கடந்த காலங்களைப் போன்று முள்ளிவாய்க்கால் மண்ணில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் பெருமளவு மக்கள் அலையாகத் திரண்டு கதறி அழுது தங்கள் உறவுகளை நினைவுகூர்வதற்கான வாசல் இந்த ஆண்டு தடைப்பட்டுள்ளது.

மாலை 6.18 மணிக்கு வீடுகளில் ஈகைச் சுடரேற்றி எங்களுக்காக மாண்ட - உறவுகளுக்காக - இரத்த சொந்தங்களுக்காக நினைவுகூருவோம். நினைவுகளின் வழியாக எங்கள் விடுதலை வேட்கையின் தாகம் தணியவில்லை என்பதை உரத்துச் சொல்வோம்.

தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன் துயரங்கள் ஊடாக பயணித்த காலம் பதினொரு ஆண்டுகளைக் கடக்கின்றது. முள்ளிவாய்க்காலில் மூர்ச்சையாகிப் போன - மூச்சடங்கிப் போன எங்கள் உறவுகளுக்காக எந்தப் பெறுமதியையும் தராத உலகம் நம்மை வெறுங்கையோடு பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கின்றது. இந்த அலைந்துழல்வு வாழ்க்கைப் பாகத்தில் நம்மிடம் எஞ்சியிருப்பதெல்லாம் எம் மீது திணிக்கப்பட்ட வன் கொடுமைகளின் நினைவுகள் மட்டும்தான். முள்ளிவாய்க்கால் பறித்துக் கொண்டவைகளிலிருந்து மிச்சமாய் இருக்கும் அந்த நினைவுகளையாவது நாம் இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். இழந்தவைகளும் அதன் துயர வலிகளும் அந்த நினைவுகளால் ஒத்தடம் பெறவேண்டும்.

ஆறாத வடுவாகி நிற்கும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை 40 ஆயிரம் தமிழ் உயிர்களைத் தின்றதாக ஐ.நா சொல்கின்றது. களத்தில் நின்ற தமிழர்களுக்குத்தான் தெரியும் இன்னும் எத்தனை ஆயிரம் கொலைகள் சமநேரத்தில் நிகழ்ந்தவை என்று. தாயின் கருவில் இருந்த சிசு தொடக்கம் மூத்தோர் வரைக்கும், கண் மூடித்தனமாகக் கொன்றொழித்தவர்கள் வெற்றியைக் கொண்டாடுகையில், நாம் ஒன்று கூடி ஒரு துளி கண்ணீரைக் காணிக்கையாக்கும் வழி வகையின்றி நிற்கின்றோம். இந்தக் காயங்களை சொற்களுக்குள் அடக்கி விட முடியாது. நம் அவலத்திற்கு மொழியில்லை. அதனால் தான் அது இன்னமும் மௌனித்தே கிடக்கின்றது.

இந்த நாள்களில், நம்மிடம் இருக்கும் துயர் வலிமை பெற வேண்டும். முள்ளிவாய்க்கால் தந்த துயர நினைவுகளை நினந்துருகுதல் அந்த வலிமையைத் தரும் கணங்களாக இருக்கும். மே 18 இல் முள்ளிவாய்க்காலில் மரணித்த அனைத்து மக்களின் மரணப் பெறுமதியையும் கனதியாக்குங்கள்.

அந்தக் குறுகிய வன்முறை வெளியில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்டவர்களுக்காக வீடுகளிலிருந்தே ஈகைச் சுடரேற்றி நினைவுருகுவோம். இந்த நாள்களில் மௌனித்த அந்த ஆன்மாக்கள் மேன்மை பெறட்டும். அவை, நமக்கு வலிமை தரட்டும். (ஒ,5)

## வீடுகளில்...

ளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனைத் தடுக்கும், குழப்பும், அச்சுறுத்தும் வகையில் பாதுகாப்புத் தரப்பினர் செயற்பட்டு வருகின்றனர். இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை எப்படித் தடுக்க முடியும் என்று இராணுவத் தளபதியிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறந்தவர்களை நினைவுகூர்வதற்கு ஜனநாயக நாட்டில் உரிமையுண்டு. அதை எவரும் மறுக்க முடியாது. நாட்டில் கொரோனா அச்சம் காரணமாக இறுதிக் கிரியைக்கு கூட 10 பேருக்கு மேல் அனுமதிக்கப்படுவதில்லை.

நாட்டில் ஊரடங்கு நடைமுறையில் இருப்பதாலும் கொரோனா அச்சம் இருப்பதாலும் கூட்டம் கூடுவதற்கு அனுமதிக்க முடியாது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் காரணம் காட்டி கூட்டம் கூடுவதை எப்படி அனுமதிக் முடியும்? தற்போதுள்ள நிலைமையில் பொது இடங்களில் மக்களில் கூட்டம் கூட முடியாது. அதையும் மீறிக் கூடினால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள். மக்கள் தங்கள் உறவுகளை வீடுகளிலிருந்து நினைவு கூரலாம், என்றார். (ஒ,5)

## நினைவேந்தல்....

லுக்கு உட்படுத்திக் கண்காணித்து அது தொடர்பான அறிக்கையை வழங்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கட்டளையில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் நல்லூர், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கும் கடிதம் பிரதியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அமைய இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலர் செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், சட்ட ஆலோசகர் சட்டத்தரணி கனரட்ணம் சுகாஷ்,சட்ட ஆலோசகர் சட்டத்தரணி நடராசா காண்டீபன், யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன், யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்களான தனுசன், கிருபாகரன் மற்றும் கனகசபை விஸ்ணுகாந், சுதாகரன், தமிழ்மதி ஆகிய 11 பேரையும் எதிர்வரும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்துமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ,5,26)

## நினைவேந்தல் சுட...

விடுத்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.


வடமராட்சி கிழக்கு வத்திராயனில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் விஜயழகன் றஜிதாவின் வீட்டுக்கு நேற்றுக்காலை சென்ற பளைப் பொலிஸாரே இவ்வாறு மிரட்டியுள்ளனர்.

இதுபற்றி பிரதேச சபை உறுப்பினர் றஜிதா தெரிவித்ததாவது:

பளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்ட பொலிஸார் 'உம்மைப் பற்றி எமக்கு நிறைய முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. நாளைய தினம் (இன்று) உங்கள் தலைமையில் வடமராட்சி கிழக்கிலுள்ள பொது இடத்தில் ஈகைச்சுடர் ஏற்றவுள்ளீர்கள் என்று தகவல் கிடைத்துள்ளது. அவ்வாறு ஏற்றக்கூடாது. மீறி ஏற்றினால் இராணுவத்தினரோ அல்லது வேறு அமைப்பினரோ உங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டால் எங்களிடம் வந்து முறையிட வேண்டாம்' என்று எச்சரிக்கை விடுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவித்தார். (த-26,108)

# ஆறாத - மாறாத வடுக்களின் சாட்சியம்










படங்கள் : அமரதாஸ்

# நினைவுகள்: வாழ்தலும் சாதலும்

ஒளண்யன்

## முன்கதைச் சுருக்கம்

பத்துவயதுக் கிட்டினனுக்கு பசித்தது. ஹற்றனில் கடைசியாக அவனுக்குச் சொந்தமாக மிஞ்சியிருந்த தாயையும் நோய் கொண்டுபோய் ஒரு கிழமையாகிவிட்டிருந்தது. அயலவர்கள் அவ்வப்போது கிட்டினனுக்கு கொடுத்து வந்த உணவும் நின்று போய்விட்டது. வீட்டிலும் எதுவுமில்லை. ஆனாலும் பசிக்கு இதெல்லாம் தெரியவில்லை. அவன் உயிரை எடுப்பதுபோல பசியின் வேதனை பெரிதாகிக் கொண்டே இருந்தது.

" வவுனியாவுக்கு போனால் காசு சம்பாதிக்கலாம்" யாரோ இலவச ஆலோசனை கொடுக்க, அதை நம்பி ஒருமாதிரி வவுனியா பஸ்ஸில் ஏறிவிட்டான். கையில் ஒரு சதம் கூட இல்லை. பஸ்காரர் பரிதாபப்பட்டு, காசு வாங்காமலே அவனை வவுனியாவில் இறக்கிவிட்டனர். பசியோடு வேலை தேடினான் கிட்டினன். ஒரு சாப்பாட்டுக்கடை முதலாளியின் கருணைக்கண் பார்வை கிட்டினன் மீது பட, அவனும் ஒரு உழைப்பாளியானான் பத்து வயதிலேயே. தனிமரமாகி நின்ற கிட்டினனுக்கு, தனக்கென்று உறவுகள் இல்லாத ஏக்கம். வேலை, வேலை,வேலை. வேலையில் முழுதுமாய் நேரத்தை தொலைத்து, தனிமையை மறக்க முயன்றான். வேலை செய்யும் இடத்தில் நண்பர்கள் கிடைத்தார்கள். கையில் கொஞ்சம் காசும் சேர்ந்திருந்தது. தனிமைக்கு விடை கொடுக்க தருணம் வந்தது.

கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் ருக்மணியை கிட்டினன் ஒரு சுபயோக தினத்தில் மனைவியாக்கிக் கொண்டான். தனிமரம் தோப்பானது. ஆனந்த வாழ்வின் விளைவாக நான்கு பிள்ளைகள். " எனக்கு நாலும் ஆம்புளைப் பிள்ளையள்" என்று பெருமையோடு சொல்லிக் கொள்வான் கிட்டினன். பிள்ளைகளுக்கும் தாய் தகப்பன் மீது பிரியம் அதிகம்.

கிட்டினன் சோற்றைக் குழைத்து ஊட்டி விட்டால் தான் அவர்கள் சாப்பிடுவார்கள். அதற்காக சாப்பிடாமல் கிட்டினன் வேலையால் வரும்வரை காத்திருப்பார்கள். இதற்காக அநேகமாக கிட்டினன் மத்தியானங்களில் வேலைத்தளத்திலிருந்து வந்து பிள்ளைகளுக்கு சோறூட்டிச் செல்வதுண்டு. பிள்ளைகள் தம்மைப்போல வறுமைக்குள் உழலக் கூடாது என்பதில் கிட்டினனும் ருக்மணியும் உறுதியாக இருந்தார்கள். கிட்டினன் மேசன் வேலைக்கோ கூலி வேலைக்கோ செல்ல, ருக்மணி வயல் வேலைக்கு போவாள். அளவான காசு. அவனுக்கென்று ஒரு குடும்பம். ஒரு வீடு. இதைவிட வேறென்ன வேண்டும்?



என்னாயிற்று கிட்டினனுக்கு? எங்கே ருக்மணி? அவரின் 'நாலு ஆம்பிளைப் பிள்ளையளும்' எங்கே? விம்மி வெடிக்கும் குரலில் மிக மெல்லிய தொனியோடு தனக்குத் தானே பேசுவது போல சொல்லத் தொடங்கினார் கிட்டினன். அவர் சொல்லிக் கொண்டே செல்ல, கால்களுக்கு கீழே கண்ணீர் ஊற்றெடுக்கத் தொடங்கியது.

## யாரடித்து நீயழுதாய்?

வெறித்த பார்வை.
வலியின் ரேகைகளை நிரந்தரமாக்கிக் கொண்ட முகம்.
பார்க்கும் வலுவற்றுப் போன வலக்கண்.
இடைவிடாத தலையிடி.
நெஞ்சுவலி.
ஒரு சாரம். ஒரு சேர்ட்.
கையில் ஒரு பொலித்தீன் பை.
பொக்கற்றில் செல்போன்.

இவைதான் கிட்டினனுக்கு எஞ்சிக் கிடக்கும் சொத்துக்கள். அடிக்கடி கலங்கும் கண்களில் வழிந்து விடத் துடிக்கும் கண்ணீரை அடக்கிக் கொண்டு, தடுமாறியபடி கொட்டில் ஒன்றைப் போட கிட்டினன் எழுகிறார். பெரும் காட்டுமரத்தையே தனியாளாகத் தூக்கிய கிட்டினனுக்கு சிறு தடியைத் தூக்கக்கூட முடியவில்லை. களைப்பும், நெஞ்சு வலியும் அவரை அப்படியே அமுக்கி கீழே இருத்துகின்றன. பேச்சுத்துணைக்கு கூட பக்கத்தில் ஆள்களில்லை. அயலவர்கள் இருந்தாலும் கிட்டினனை அவர்கள் கண்டுகொள்வதில்லை. கிட்டினனுக்கு இப்போதுள்ள ஒரே துணை அவர் மார்போடு அணைத்தபடி கொண்டு திரியும் பொலித்தீன் பையும், அதற்குள் இருக்கும் கடதாசி ஆவணங்களும் தான். காட்டுத்தடியில் தலைசாய்த்தபடி கிட்டினன் பொலித்தீன் பையைத் திறந்து, சில ஆவணங்களை எடுக்கிறார். அவர் அந்த ஆவணங்களைப் பார்க்க முதலே கண்ணீர் ஓடிச் சென்று அந்த காகிதங்களை கட்டியணைத்துக் கொள்கிறது.

என்னாயிற்று கிட்டினனுக்கு? எங்கே ருக்மணி? அவரின் 'நாலு ஆம்பிளைப் பிள்ளையளும்' எங்கே?
விம்மி வெடிக்கும் குரலில் மிக மெல்லிய தொனியோடு தனக்குத் தானே பேசுவது போல சொல்லத் தொடங்கினார் கிட்டினன். அவர் சொல்லிக் கொண்டே செல்ல, கால்களுக்கு கீழே கண்ணீர் ஊற்றெடுக்கத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் கண்ணீரூற்று சுழலாக மாறி துயரின் எல்லாத் திசைகளுக்கும் இழுத்து செல்லத் தொடங்கியது.

## சதைத்துண்டங்களின் நினைவுகள்

"எல்லாரும் சந்தோசமாத்தான் இருந்தம். மூத்தவனுக்குப் பதினைஞ்சு வயது. புண்ணியமூர்த்தி எண்டு டாப்பு பேர். ஆனா வீட்டுப்பேர் சாந்தன். கடைசிக்கு தமிழ்மாறன் எண்டு பேர் வைச்சன். அவனுக்கு மூண்டு வயசுதான். இடையில .............., ....................... .
அவங்கட வயசு இப்ப சரியா நினைவுக்கு வரேலை. ஒருத்தனுக்கு பத்தும் மற்றவனுக்கு 5 வயசும் இருக்கும்.

எங்களில நல்ல விருப்பம் அவங்களுக்கு. நான் சோறு தீத்தாட்டி அண்டைக்கு முழுக்க சாப்பிடவே மாட்டாங்கள். இப்பிடியெல்லாம் இருக்கேக்க தான் சண்டை தொடங்கிட்டு. நாலு பிள்ளையளையும் எப்படியாவது காப்பத்தணுமே. சொந்தமா வீடு போட்டிருந்த காணிய வித்திட்டு, வவுனியாக்கு போக நினைச்சம். காணியும் வித்தாச்சு. ஆனா வவுனியாக்கு போக இயக்கம் விடேலை.

கிளிநொச்சிக்கு கிட்ட ஆமியும் வந்திட்டாங்க. அதால நாங்க காணி வித்த காசோட முள்ளிவாய்க்காலுக்கு போய்ட்டம். அங்க வலைஞர் மடத்தில பெரிய சேர்ச்சுக்கு கிட்ட சீலையால கொட்டில் போட்டு, பக்கத்தில பங்கர் வெட்டி இருந்தம். எப்ப பாத்தாலும் ஒரே குண்டுச் சத்தம். கொஞ்ச நாள் போக அந்தச் சத்தம் பழகிட்டு.

அங்க தொழில் இல்லை. காணி வித்த காசை வைச்சு தான் சீவிக்கணும். சாமான் சட்டு ஒண்டுமில்லை. பருப்பும் சோறும் தான் ஒவ்வொரு நாளும். சின்னப்புள்ளையள் எவ்வளவு நாள் தான் பருப்போட சாப்பிடுங்கள்? நான் சோறு குழைச்சு தீத்தேக்க, அவங்கள் 'பருப்புக் கறியெண்டா வேண்டாம்' எண்டு அழுவாங்கள்.

இங்க இருந்தா கஷ்டம் எண்டு ஆமிக்கட்டுப்பாட்டுக்க போக நினைப்பம். ஆனா போற வழியில குண்டு பட்டு, பிள்ளையளுக்கு ஏதும் நடந்திடுமோ எண்ட பயத்தில ' நாளைக்கு போவம்' எண்டு ஒவ்வொரு நாளும் தள்ளிப் போட்டம்.

ஒருநாள் ருக்குமணி சொன்னா, ' பிள்ளைகள் பாவம். கரைக்கு போய் மீன் வாங்கியாங்கோ' எண்டு.

பிள்ளைகளுக்கு வாய்க்கு ருசியா சாப்பிடு குடுக்க எனக்கும் ஆசைதானே. கரைக்கு போனன். அரைக்கிலோ மீன் ஆயிரம் ரூபா. புள்ளைகள் சந்தோசமா சாப்பிடப் போறாங்கள் எண்ட நினைப்பில வந்து கொண்டிருந்தன். அப்ப.... எங்கட கொட்டில் பக்கமா நிறையச் சனம் நிண்டிருந்தாங்கள். பதறிக் கொண்டு ஓடிப்போனன். அங்க....எங்கட கொட்டில் எரிஞ்சு கொண்டிருந்தது. நான் மனுசியையும் புள்ளையளையும் தேடினன். காணேலை. பக்கத்தில எங்காவது இருப்பாங்க எண்டு பாத்தன்.

(தொடர்ச்சி)

அப்பதான் எங்கட பங்கருக்கு பக்கத்தில .....துண்டு துண்டா....கை, கால் எல்லாம் வேற வேறையா..... ஐயோ...............!

( கிட்டினனால் தொடர முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்கிறது. குனிந்து கொள்கிறார். தரையில் 'பொத்,பொத்' என்று கண்ணீர்த் துளிகள். அந்தக் கண்ணீரைத் துடைக்கவோ, " அழாதையுங்கோ" என்று சொல்லவோ முடியாதவனாகி, கூனிக் குறுகி நின்றோம். கொஞ்சநேரத்துக்குப் பின்னர் சொல்லத் தொடங்கினார்.)

நாலு புள்ளைகள், மனுசி. ஒருத்தரும் மிஞ்சேலை. செல் அடிக்கிறாங்கள் எண்டு பங்கருக்க போயிருக்கிறாங்கள். ஆனா குண்டு நேரா எங்கட பங்கருக்க விழுந்திருக்கு.

அங்க நிண்டவ என்னோட சேர்ந்து சிதறின உடம்புகளை பொறுக்கித் தந்திச்சினம். ஒரு 'பொடியைக்' கூட முழுசா எடுக்க முடியேலை. ஒரு குண்டு என்ர பிள்ளையள், மனுசி, என்ர சந்தோசம் எல்லாத்தையும் சிதற வைச்சிட்டுது.முத்து முத்தா வளத்த நாலு பிள்ளையளையும் ஒரேயடியா பறி குடுத்திட்டன்.

ஒவ்வொண்டா பொறுக்கின சதைத் துண்டுகளை உரப்பையில போட்டு கட்டி, நாங்கள் இருந்த பங்கருக்க போட்டு மூடிட்டன்.

இப்ப என்ர புள்ளைகளின்ர பாக்க ஒரு போட்டோ கூட என்னட்ட இல்லை. அதுதான் இந்தக் கடுதாசியளைப் (மரணச்சான்றிதழ்) பாக்கிறான். எனக்கு தமிழ் எழுத வாசிக்கத் தெரியாது. ஆனாலும் இந்தக் கடுதாசியளில என்ர புள்ளைகளின்ர பேர் இருக்கும் தானே. அந்த நினைப்பில பாப்பன்.

இப்ப சாப்பிட மனம் வாறேலை. ஒவ்வொருக்க சாப்பாட்டில் கை வைக்கேக்கையும் " அப்பா, எனக்கு ஒரு வாய்" எண்டு வாயைத் திறந்தபடி இருக்கிற புள்ளை யளின்ர நினைப்புத்தான் வரும். அதால சாப்பிடுறது குறைவு. தேத் தண்ணிதான் கூட.



## நீள நினைதல்

ஒரேயொரு எறிகணையின் கோரப்பசிக்கு தன் நான்கு பிள்ளைகளையும், மனைவியியும் பறிகொடுத்து விட்டு மீண்டும் தனிமைக்குள் தள்ளப்பட்டுவிட்டார் 48 வயதான கிட்டினன். குடும்பத்தவர்களின் உடல்களின் சதைத் துண்டங்களை ஒவ்வொன்றாக தேடியெடுத்து, 5 பேரின் சடலங்களையும் (ஒரு உரப்பைக்குள் கூட்டிக் கட்டப்பட்ட சதைத்துண்டங்களே கிட்டினனின் குடும்பத்தாரின் சடலங்கள்) பங்கருக்குள் புதைத்தவருக்கு எதிரில் தெரிந்தது இருளே.

இனி குண்டுகளுக்கும்,துப்பாக்கிச் சன்னங்களுக்கும் என்ன பயம்? எல்லாமே போய்விட்டதே.

பிள்ளைகளையும் மனைவியையும் புதைத்த இடத்தில் இருக்க அவருக்கு பைத்தியமே பிடித்துவிடும் போல இருந்தது. கால் போன போக்கில் நடக்கத் தொடங்கினார். குண்டுகள் அருகில் வீழ்ந்து வெடித்தன. சன்னங்கள் உரசியபடி சென்றன. கிட்டினன் அவை தன் உயிரைக் குடித்தால் நல்லது என்ற எண்ணத்தில் குண்டுகள் விழும் பக்கமாகவே நடந்தார். ஆனால் அவைக்கு கிட்டினனின் உயிர் கசந்திருக்க வேண்டும். கிட்ட விழுந்து வெடித்தனவே தவிர உயிரைப் பறிக்கவில்லை. குண்டுகளால் எழுந்த மணல் துணிக்கைகள் பேரலையாக கிட்டினனின் கண்ணைத் தாக்கின. வலக்கண்ணின் மெல்ல மெல்ல மணல் மோதுகையால் பார்வையை இழக்கத் தொடங்கியது. நலன்புரி நிலைய வாழ்வுக்கு பின்னர் வெளியே வந்த கிட்டினனுக்கு எங்கு போவது என்று தெரியவில்லை. அவருக்குத்தான் யாருமே இல்லையே.

ஆனாலும் பிள்ளைகளோடு சந்தோசமாக வாழ்ந்த கிளிநொச்சி, கிருஷ்ணபுரம் போக முடிவெடுத்தார். தன் வாழ்வினை அழகாக்கிய மனைவி, பிள்ளைகளின் நினைப்போடு கிருஷ்ணபுரத்தில் அலையத் தொடங்கினார். தெரிந்தவர்களின் கொட்டில் ஒன்று கிட்டினனின் வசிப்பிடமானது. அந்தக் கொட்டில் முழுதும் வியாபித்திருந்த தனிமையை , பிள்ளைகளின் நினைப்பால் கிட்டினன் விரட்ட முயன்றார். எந்த நேரமும் , சதைத் துண்டங்களாகச் சிதறிக் கிடந்த பிள்ளைகளை நினைவால் சுமக்க, நோய்கள் அவரில் நிரந்தரமாகக் குடிபுகுந்தன.

6 மாதங்கள் கிட்டினன் நினைவிழந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமளவுக்கு நோய் உக்கிரமடைந்திருந்தது. உடல் உறுதி குலைந்து நடைப்பிணமாக மாறிவிட்ட கிட்டினனுக்கு கிருஷ்ணபுரத்தை தவிர வேறெந்த ஊரும் நினைவுக்கு வரவில்லை. மீண்டும் கிருஷ்ணபுரத்தில் கிட்டினன்.

உடல் எந்த வேலைக்கும் செல்லமுடியாமல் தடை போட்டது. தனியாள் என்பதால் வீட்டுத் திட்டமும் இல்லை. கொட்டிலே கதி. கையிலும் காசில்லை. சாப்பாட்டுக் கோப்பை கூட அவரிடம் இருக்கவில்லை. யாராவது வலிய வந்து கொடுக்கும் சாப்பாட்டுதான் அவரின் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருந்தது. அந்தப்பகுதி இராணுவத்தினர் கிட்டினனின் கதையறிந்து . அவ்வப்போது சாப்பாட்டுப் பார்சல் கொடுப்பார்கள். தங்களின் எறிகணையால் ஒட்டுமொத்தக் குடும்பத்தையே கிட்டினன் இழந்த கதை அவர்களுக்கு குற்ற உணர்வை உண்டாக்கியிருக்க வேண்டும். ஒருநாள் சிப்பாயொருவன் அவரிடம் வந்து செல்போன் ஒன்றைக் கொடுத்துள்ளான்.

" நான் வேறு முகாம் போகிறேன். இதில் என் நம்பர் உள்ளது. உங்களுக்கு சாப்பாடு வேண்டுமென்றால் கோல் பண்ணுங்கள். நான் இங்குள்ள சக சிப்பாய்கள் மூலம் ஒழுங்கு செய்கிறேன்" என்று சொல்லிச் சென்றிருக்கிறான். ஆனால் கிட்டினன் தானாக யாரிடமும் சாப்பாடு கேட்டதில்லை. இரக்கப்பட்டவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொள்வார். அவரையும் மிஞ்சி பசியெடுத்தால் தூரத்தே இருக்கும் சாப்பாட்டுக் கடைக்குச் செல்வார். கடை முதலாளிக்கு கிட்டினனின் சுமக்கும் துயர் தெரியும். காசு வாங்காமல் தேநீர் கொடுப்பார்.

போரில் உயிரிழப்பைச் சந்தித்த குடும்பங்களுக்கான இழப்பீட்டைப் பெற கிட்டினன் கடந்த சில வருடங்களாக அலைந்தும் இன்னும் அது கிடைத்தபாடாக இல்லை.

" இவ்வளவு நாளும் அங்கால ஒரு வீட்டுக்காரரின் கொட்டிலில இருந்தன். இப்ப ஒரு காணியில கொட்டில் போட இன்னொரு ஆள் ஓமெண்டு சொல்லிட்டார். எங்கட றோட்டால மிதிவெடி எடுக்கிற ஆக்கள் போய் வாறவங்கள். அவங்களிட்ட கொட்டில் கட்ட காட்டுத்தடி தாறீங்களோ எண்டு கேட்டன். அவங்களும் பாவத்துக்கிரஞ்சி கொண்டுவந்து தந்தவை. கிடுகும் பக்கத்தில ஒரு வீட்டில கேக்க தாறனெண்டவை. இப்ப ஒரு கொட்டில் போட வெளிக்கிட்டன். ஆனா உடம்பு ஏலுதில்லை. தலை சுத்தி, நெஞ்சுவலி மாதிரி வந்திட்டு. எண்டாலும் மெல்ல மெல்ல கட்டிப் போடுவன்" என்று சொல்லும் கிட்டினனிடம்,

" ஏன் இப்பிடித் தனிய இருந்து கஷ்டப்படுறியள்? ஏதும் முதியோர் இல்லத்தில போய் இருக்கலாமே?" என்று கேட்டோம். பதில் ஒரு பெருமூச்சோடு வந்தது.

"நாலு பிள்ளையளை வளத்து ஆளாக்கின என்னை இன்னொராள் பராமரிக்கிறதை நினைச்சும் பாக்க ஏலாது. எனக்கு அப்படி இருக்க பிடிக்காது. அதைவிட இங்க இருந்து வயித்துக்கு சோறில்லாட்டியும், உடுக்க துணிமணி இல்லாட்டியும், என்ர புள்ளையள் ஓடித் திரிஞ்ச இடங்கள், படிச்ச பள்ளிக்கூடம் இதுகளை பாத்து கொஞ்சம் மனதை ஆத்தாலாம்" சொல்லிவிட்டு , கிளிநொச்சி வைத்தியசாலைப் பக்கமாக நடக்கத் தொடங்குகிறார் கிட்டினன். அவர் பின்னே நிழலாகத் தொடர்கின்றன அவரின் பிள்ளைகள் கூண்டோடு சதைத்துண்டுகளான கணமும், அதே பிள்ளைகள் அவரிடம் சோறு கேட்டுக் கொஞ்சி மகிழ்ந்த நாள்களும்.

நினைவே பிணி.
நினைவே மருந்து.

(மீள் பிரசுரம் : உதயன்,2015)

## உயிர்த் தெழுந்து வாரீர்- எங்கள் ஓலங்களைக் கேளீர்

நெஞ்சு கனக்கிறது
நீண்ட நெடுந்துயர் வந்து
தொண்டையை அடைக்கிறது
கண்டு வந்த காட்சிகள்
கண்முன்னே விரிந்து
மண்டையைப் பிறக்கிறது- உங்கள்
நினைவுகள் வந்து எம் மனங்களை
ஏறி மிதிக்கிறது.- எம்
மனச்சாட்சியே எம்மை பழிக்கிறது
ஓ....!
முள்ளிவாய்க்கால் முற்றத்தில்- நாங்கள்
அள்ளிக் கொடுத்த எம் உறவுகளே!
சொல்லி அடங்காத சோகத்தில்- உம்மை
எண்ணி எண்ணி அழுகின்றோம்
எம்மை மன்னியுங்கள்.

கொத்து கொத்தாக
செத்துக்கிடந்த உமை எல்லாம்
காக்கைகளுக்கும் கழுகளுக்கும்
கொத்தித் தின்ன விட்டு
தப்பிப் பிழைத்து வந்த பாவியர் நாங்கள்

நந்திக் கடல் அலையில்
நீந்திக் கிடந்த உம் சடலங்களை
நல்லடக்கம் செய்ய நாதியற்று
கண்டும் காணாமல்

நாறிக்கிடந்த உம் பிணங்களை
ஏறிக் கடந்து வந்த ஏதிலிகள் நாங்கள்.

செத்துக் கிடந்த தாய் முலையில் பால் குடித்த
பச்சிளம் குழந்தையை - இந்த

உலகத்தில் யாரேனும் கண்டதுண்டா? அந்த
அவலத்தை நாங்கள் கண்டுவந்தோம்

ஓடிய வயிறுமாய்
உலர்ந்து போன உடலுமாய்,
வட்டுவாகல் பாலத்தில் எம் பாதங்கள் பட்டபோது
நாங்களும் செத்துத்தான் போனோம்

மண்டியிட்ட கணங்கள்
மரணத்தை விடக் கொடியது - அந்தத்
தருணத்தைக் கடந்த உங்கள்
இழப்புகள் அதைவிடப் பெரியது

உலகத்தின் மனச்சாட்சி மரணித்துவிட்ட காரணத்தால்
மரித்துப் போன எம் உதிரத்தின் உறவுகளே!
விழி நீரில் விளக்கேற்றி - உம்
நினைவுகளில் விழுந்தழுது தொழுகின்றோம்
விழி திறந்து பாரீர் ...

கவிஞர் புதுவைஅன்பன்


## அறிவித்தல்

பொற்பதி, குடத்தனையைச் சேர்ந்த திரு. அரியதாஸ் - மேரி றெஜீனா அவர்களின் ஞாபகார்த்தமாகப் பொற்பதி - குடத்தனைச் சந்தி பிரதான வீதியின் குடத்தனைச் சந்தியில், பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட காணியில் வளைவு ஒன்றைக் கட்டவுள்ளார். மேற்படி வளைவுக்கு ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து எதிர்வரும் 14 நாள்களுக்குள் தங்கள் ஆட்சேபனையை தவிசாளர், பருத்தித்துறைப் பிரதேச சபை, பருத்தித்துறை என்னும் முகவரிக்கு எழுத்து மூலம் ஆட்சேபனையைத் தெரிவிக்கவும்.

தகவல்:
ஆ.வினோஜன்.

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்



### வைரவி முருகேசு

(ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், வலிகாமம் வடக்கு)

மாம்பிராய் வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும், தற்போது பாடசாலை வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவி முருகேசு நேற்று (17.05.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவி பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரம் மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பகீரதன் (ஆயுர்வேத மருந்தாளர்-வலிகாமம் வடக்கு பிரதேச சபை), சுகன்யா (ஆசிரியர், யா/ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலை), கயல்விழி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சனாதனனின் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆருயிர் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, நாகேஸ்வரி மற்றும் ஐயாத்துரை, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பூலோகநாதன், சுமதிதேவி, காலஞ்சென்ற வரதராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 87 59051

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
31 . 03 . 1941

மறைவு
19 . 04 . 2020

கடந்த (19.04.2020) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் செல்வரத்தினம் திருலோகவதி

சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் இன்று (18.05.2020) திங்கட்கிழமை புனித கல்லாற்றங்கரையிலும், வீட்டுக்கிரியைகள் நாளை (19.05.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ச.செல்வரத்தினம் (J.P)
10ஆம் ஒழுங்கை மகாறம்பைக் குளம்,
வவுனியா. 077 072 4479.

குடும்பத்தினர்.

# ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 1,541 கோடி ரூபா நட்டம்



கொழும்பு, மே 18

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு கடந்த பெப்ரவரி மாதம் முதல் எதிர்வரும் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்கு 82 மில்லியன் அமெரிக்க டொலர் (ஆயிரத்து 541 கோடி ரூபா) நட்டம் ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் மட்டும் 20 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் 62 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்படும் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா விமான சேவை 20 நாடுகளுக்கான விமானப் போக்குவரத்துச் சேவையை வழங்கி வருகின்றது. கொரோனா வைரஸ் தாக்கத்தால் பல நாடுகள் விமானப் போக்குவரத்துக்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டு தாக்குதலால் குறித்த நிறுவனத்துக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர் வரை நட்டம் ஏற்பட்டது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-44)

## 43 ஆயிரத்து 137 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, மே 18

கொரோனா தொற்று தொடர்பில் அறிந்து கொள்ள மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகள் இதுவரை 43,137 பேருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் ஆயிரத்து 81 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ப)

## பொருள்களை தொடத் தடை

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பொருள்களைத் தொட்டுப் பார்ப்பதற்கோ அல்லது நுகர்ந்து பார்ப்பதற்கோ தடை செய்யப்பட்டுள்ளது.

சுகாதார நலன் கருதி நீங்கள் கொள்வனவு செய்யும் பொருள்கள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (க-113)

## பொதுத் தேர்தல் தாமதமாகலாம்

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மே 18

பொதுத் தேர்தலை நடத்துவது மேலும் காலதாமதமாகலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுகாதார அதிகாரிகள் மற்றும் தேர்தல் ஆணைக்குழு இடையில் நடைபெற்ற பேச்சில் தற்போது தேர்தலை நடத்தும் சூழ்நிலை இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

பொதுத் தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குக் கடந்த 15ஆம் திகதிக்கு முன்னர் விருப்பு வாக்கு இலக்கங்களை வழங்கியிருக்கவேண்டும்.

வேட்பாளர்களுக்காக விருப்பு வாக்கு இலக்கங்களை வழங்கியது தொடர்பில் வெளியிடவேண்டிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாத காரணத்தால், எதிர்வரும் ஜூன் மாதம் பொதுத் தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## மக்களை ஒன்றுகூட்டி மத நிகழ்வு போதகருக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 18

மாரவில நகரில், மக்களை ஒன்று கூட்டி மத நிகழ்வை நடத்திய போதகர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் மாரவில பொலிஸாரும் மஹவெவ பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து நடத்திய விசேட சுற்றிவளைப்பையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மஹவெவ பொது சுகாதார பரிசோதகர் பி.எம். வஜிர நிலந்த தெரிவித்தார்.

மாரவில நகரில் 3 மாடிக் கட்டடம் ஒன்றில் மக்கள் ஒன்று கூடி மத போதனை நிகழ்வு ஒன்றை நடத்துவதாக பொலிஸாருக்கு பிரதேச மக்கள் தகவல் கொடுத்துள்ளனர். சம்பவ இடத்துக்குப் பொலிஸாரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் சென்றுள்ளனர். இதன்போது நான்கு சிறுவர்கள் உள்ளடங்கலாக 27 பேர் அங்கு ஒன்று கூடியிருந்ததை பொலிஸார் கண்டறிந்தனர். இதில் 18 பேர் பெண்களாவர். பலர் முகக்கவசம் கூட அணிந்திருக்கவில்லை என கூறிய பொலிஸார், குறித்த கட்டடத்துக்கு தற்போது சீல் வைத்துள்ளதாகவும், அந்த நிகழ்வை ஏற்பாடு செய்த போதகருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர். (ப)

## தாழமுக்கம்...

தற்போது சூறாவளியாக மாற்றம் பெறவுள்ள நிலையில் அடுத்துவரும் இரண்டு அல்லது மூன்று நாள்களில் வடக்கு திசையில் இருந்து வடமேல் திசைநோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகின்றதால் இன்று தொடக்கம் மேல் மாகாணம், சப்ரகமுவ, மத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களில் கனமழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

**பல பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம்**

கடந்த வெள்ளிக்கிழமை நாட்டில் பெய்த கனமழை காரணமாக பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. தெற்கின் பல பகுதிகள் அதிக பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள நிலையில் இன்று தொடக்கம் மீண்டும் மழை அதிகரிக்கும் காரணத்தால் பல பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

**கடல் கொந்தளிப்பு அதிகரிக்கும்**

அத்துடன் காற்றின் வேகம் மணிக்கு 60 தொடக்கம் 70 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் என்று எதிர்பார்க்கப்படுவதால் புத்தளம் தொடக்கம் காலி, ஹம்பாந்தோட்டை மற்றும் பொத்துவில் வரையிலான கடற்கரைகளில் கொந்தளிப்பு அதிகரிக்கும் என எச்சரிக்கப்படுவதால் இன்று தொடக்கம் மீள் அறிவிக்கும் வரையில் மீனவர்கள் எவரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. கடலுக்கு சென்றுள்ள மீனவர்களை மீண்டும் கரைக்கு திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களை பாதுகாப்பாக அழைத்து வர கடற்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஒ,5)

## நினைவேந்தலுக்கு...

யின் தலைமையகத்தில் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தலைமையில் நிகழ்வு இடம்பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.
அத்தோடு உதயன் பத்திரிகை நிறுவனத்தில் அதன் இயக்குனர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில் நிகழ்வு நடத்தப்படவிருந்தது.
தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவில் அவர் வசிக்கும் இல்லத்தில் நிகழ்வு நடத்தப்படவிருந்தது.
இந்த நிகழ்வுகள் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்த நிலையில் அவற்றைத் தடை செய்ய நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டுள்ளது. மீறி நிகழ்வு இடம்பெற்றால் அதில் பங்கேற்கும் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள், என்று யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ஒ,5)

## உறவுகள்...

அனைத்துத் தரப்பினரும் நினைவுகூரலாம். ஆனால், மே 18 என்ற நாள் இறுதிப் போரில் உயிரிழந்த புலிகளை நினைவுகூருவதற்காகப் புலத்தில் இருக்கும் புலிகள் ஆதரவு அமைப்புகளால் பிரகடனப்படுத்தப்பட்ட நாள். மே 18இல் உறவுகள் என்ற பெயரில் புலிகளை நினைவுகூர இந்நாட்டில் எவருக்கும் அனுமதி இல்லை. இதில் அரசு உறுதியாகவுள்ளது. இந்த நிலைப்பாட்டுக்கு எதிராக எவரும் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக இராணுவமும் பொலிஸாரும் கடும் நடவடிக்கை எடுப்பார்கள். அதுவும் கொரோனா வைரஸின் தாக்கத்துக்கு மத்தியில் அரசு விரும்பாத வேலைகளில் ஈடுபடுவதை சம்பந்தப்பட்ட தரப்பினர் தவிர்க்க வேண்டும். எனவே, இறுதிப் போரில் உயிரிழந்த தமது உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவுகூர வேண்டும் எனில் வீடுகளில் இருந்து நினைவுகூரலாம், என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

**உதய கம்மன்பில**

இராணுவத்தினரின் அர்ப்பணிப்புக்களினால்தான் இறுதிப் போரை எம்மால் வெல்ல முடிந்தது. புலிப் பயங்கரவாதிகளுக்கு முடிவு கட்ட முடிந்தது. புலிகளின் பிடியிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை எம்மால் மீட்க முடிந்தது. இந்தநிலையில் 'மே 18' என்று ஒரு நாளைப் பிரகடனப்படுத்தி பயங்கரவாதிகளை நினைவுகூர நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். நாட்டின் பாதுகாப்புத்துறைக்குச் சவால் விடும் வகையிலான இப்படியான வேலைகளைச் செய்து இராணுவத்தினரின் தியாகங்களைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று தமிழ்த் தரப்பினரிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம். கொரோனா வைரஸால் நாடு ஆபத்தைச் சந்தித்துள்ளது. மக்களுக்காக இரவு பகலாகச் சேவையாற்றிய முப்படையினரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, மக்கள் அனைவரும் சுகாதாரப் பிரிவினரின் அறிவுரைகளைப் பின்பற்றிக்கொண்டு வீடுகளுக்குள் இருப்பதே சிறந்தது. அதைவிடுத்து புலிப் பயங்கரவாதிகளை நினைவுகூரும் வகையில் பொது இடங்களில் எவரும் கூடினால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், என்று புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார். (ஒ,5,22)

## குழு...

மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.
அந்தப் பகுதியில் இரு தரப்பினருக்கு இடையிலான வாய்த் தர்க்கம் குழு மோதலாக மாறியது. இந்த மோதலில் இருவர் காயமடைந்தவர்கள் மந்திகை மருத்தவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த மோதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ,5,26)

## கொரோனா...

களின் மொத்த எண்ணிக்கை 981 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் இருவர் லண்டனிலிருந்து நாடு திரும்பியவர்கள் என்றும் ஏனையோர் கடற்படையினர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,22)

## பெற்றோல்...

ளது. புதிய விலை 142 ரூபாவாகும். ஏனைய எரிபொருள்கள் விலைக்ள் மாற்றமில்லையெனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ,5)

# மீள்கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் - 2020

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காகக் கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. 08.05.2019 ஆந் திகதிய 04/2016 (ii) ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதிபுனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில (தொலைபேசி 0212240017) மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 18.05..2020 தொடக்கம் 01.06.2020ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து **18.05.2020** திகதியிலிருந்து **01.06.2020**ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாகருபா.**3000/- (வரிநீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து **02.06.2020**ம் திகதி **பி.ப 14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விகள் தொடர்பாக இறுதித்தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ். இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம்(வீதி) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1 | மயிலங்காடு கிழக்கு ஞானவைரவர் வீதிப் புனரமைப்பு ,ஏழாலைதெற்கு NP/14/41(15)/02/05/PC/2020/01 | 3.071 | 3 மாதம் | C8 & C7 | 30,800.00 | 02.09.2020 |
| 2 | மடத்தடி விவசாயவீதி கந்தரோடை, ஆர்க் வீதி 1ம் ஒழுங்கை ,சபாபதிப்பிள்ளை 4ஆம் ஒழுங்கைபுனரமைப்பு NP/14/41(15)/02/05/PC/2020/02 | 1.752 | 2 மாதம் | C9 & C8 | 18,000.00 | 02.09.2020 |
| 3 | தில்லைகட்டி 1ஆம் குறுக்குவீதிபுனரமைப்பு NP/14/41(15)/02/05/PC/2020/03 | 0.914 | 2 மாதம் | C9 & C8 | 9,500.00 | 02.09.2020 |
| 4 | கலாநிதிவீதி 4ஆம் குறுக்குவீதி ஏழாலை வடக்கு,முத்துமாரியம்மன் 1ஆம் குறுக்குவீதிபுனரமைப்பு NP/14/41(15)/02/05/PC/2020/04 | 1.755 | 2 மாதம் | C9 & C8 | 18,000.00 | 02.09.2020 |
| 5 | குறிஞ்சிக்குமரன் சனசமூகநிலையவீதி, கலைமகள் சனசமூகநிலையவீதி புனரமைப்பு, குப்பிளான் தெற்கு NP/14/41(15)/02/05/PC/2020/05 | 2.160 | 3 மாதம் | C8 & C7 | 22,000.00 | 02.09.2020 |
| 6 | பத்தானைவீதியினையும் சங்கடத்தார் வீதியினையும் இணைக்கும் முருகமூர்த்திகோவில் வீதிபுனரமைப்பு,தாவடிதெற்கு NP/14/41(15)/02/05/PC/2020/06 | 3.000 | 3 மாதம் | C8 & C7 | 30,000.00 | 02.09.2020 |
| 7 | பண்ணைமுன் வீதித்திருத்தம், இணுவில் வடகிழக்கு NP/14/41(15)/02/05/PC/2020/07 | 3.000 | 3 மாதம் | C8 & C7 | 30,000.00 | 02.09.2020 |
| 8 | மானிப்பாய் 1ஆம் வீதிப் புனரமைப்பு NP/14/41(15)/02/05/PC/2020/08 | 1.120 | 2 மாதம் | C9 & C8 | 11,200.00 | 02.09.2020 |
| 9 | மல்வம் வீதி மற்றும் ஒழுங்கைப் புனரமைப்பு (மிகுதிவேலை) NP/14/41(15)/02/05/PC/2020/09 | 2.748 | 3 மாதம் | C8 & C7; | 27,500.00 | 02.09.2020 |
| 10 | புதுமடம் குறுக்கு 1ம், 2ம், 3ம் வீதிகள் புனரமைப்பு,உடுவில் NP/14/41(15)/02/05/PC/2020/10 | 1.060 | 2 மாதம் | C9 & C8 | 11,000.00 | 02.09.2020 |

10. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் **27.05.2020** ஆம் திகதியன்று மு.ப **10.00** மணிக்கு நடைபெறும்

**க.தர்ஷன்,**
தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்குபிரதேசசபை
சுன்னாகம்.




# பொலிஸாருக்கு தெளி கருவிகள்

வவுனியா,மே18

கொரோனோ வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பொலிஸாருக்குத் தெளிகருவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா நகரில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பொலிஸாரின் தொடர்ச்சியான நடவடிக்கைக்காக வவுனியா சண்முகம் களஞ்சியம் மற்றும் சில்வா நிறுவனத்தின் நிதி உதவியில் கொள்வனவு செய்யப்பட்ட தெளிகருவிகள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

வடமாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பத்மசிறி முனசிங்க, வன்னி மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மானவடு,பொலிஸ் உயர் அதிகாரிகள் முன்னிலையில் கருவிகள் கையளிக்கப்பட்டன. (க-110)

# பாதிக்கப்பட்ட தனியார் துறை ஆய்வறிக்கை அமைச்சரிடம்

கொழும்பு, மே 18

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள தனியார் துறை நிறுவனங்கள் தொடர்பில் தொழில் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வறிக்கை இன்று சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது என்று தொழில் ஆணையாளர் வி.விமலவீர தெரிவித்துள்ளார்.

நாட்டின் தனியார்துறை வர்த்தக நிறுவனங்களின் நிலை மைகள், ஊழியர்களின் பாதுகாப்பு என்பன தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், குறித்த நிறுவனங்களுக்கு அவசியமான நிவாரணங்களை ஏற்பாடு செய்வது தொடர்பில் ஆராய்வதற்கான பணிகளை அரசாங்கத்திற்கு இலகுபடுத்தும் வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

**அடகு நகை மீட்பு**

நீங்கள் அடகுவைத்த நகைகளை மீட்க முடியாமல் விட்டால் மீட்டு அதற்கான பெறுமதி பணம் தரப்படும்.


தொடர்பு: 077 6151283

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1988ஆம் ஆண்டு பிறந்த திருவாதிரை நட்சத்திரம், கிரகபாவம் 16 உடைய சிங்கப்பூரில் வேலை செய்யும் அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை. அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.

தொடர்பிற்கு: 077 742 4582

## சேவைநலன் பாராட்டு



**ஆறுமுகம் ஜெயராஜா**

யாழ். போதனா வைத்திய சாலையில் 21 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராகவும் கடமையாற்றி கடந்த (16.05.2020) சனிக்கிழமை ஓய்வுபெற்று சென்றுள்ள ஆறுமுகம் ஜெயராஜா அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

**தாதிய நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் முன்னாள் ஆசிரியர் சங்கத்தின் பொருளாளரும் கலைப் பீடத்தின் மெய்யியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான **ந.சிவகரன்** அவர்களின் அன்புத் தந்தையாரும் மற்றும் எமது ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் மெய்யியல்துறையின்உளவியல் கற்கைநெறியின் முதுநிலை விரிவுரையாளருமான **திருமதி மேனகா சிவகரன்** அவர்களது அன்பு மாமனாருமாகிய

**சுப்பிரமணியம் நவரத்தினம்**

அவர்கள் கடந்த (16.05.2020) சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருவதுடன் அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு **02.11.1930** உதிர்வு **16.05.2020**

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றும் **ந.பாலமுரளி** அவர்களின் பாசமிகு தந்தை

**சுப்பிரமணியம் நவரத்தினம்**


அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாண பிராந்திய நிலையம்.**

## மரண அறிவித்தல்



**ஐயாத்துரை வேலாயுதபிள்ளை**

(இளைப்பாறிய சங்கீத ஆசிரியர், யா/நீர்வேலி அத்தியார் இந்து கல்லூரி)

யாழ். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை வேலாயுதபிள்ளை கடந்த (15.05.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவராசா தங்கம்மா தம்பதியகரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், சுரேந்திரன் (கண்ணன்), சுகந்தினி, சுந்தரேசன் (ஈசன்), காலஞ்சென்ற சுதர்சன் (சுதன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வைரவநாதன் மற்றும் அன்னமுத்து, ராசம்மா, காலஞ்சென்ற ராசமணி மற்றும் அரசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2020) திங்கட்கிழமை, Chapel Ridge Funeral Home & Cremation Centre8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

G.P.S றோட் கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
T.P-077 472 0971.

தகவல்:
ஐ.அரசபிள்ளை,

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் **பாலசிங்கம் முரளிதரன்** அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி அருந்தவநாயகி குமாரசாமி**

அவர்களின் மறைவுக்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம்**

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அன்னை மடியில் 07 • 04 • 1918



இறைவன் அடியில் 17 • 04 • 2020

அமரர் **வேலுப்பிள்ளை நாகலிங்கம்**

கடந்த 17.04.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (18.05.2020) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பங்குகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரது பிரிவிற்கு அஞ்சலி செலுத்திய, அனுதாபம் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"குமரகோட்டம்",
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

Dr.அ.ஜெயகுமரன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சிவஞானம் சிவகந்தராசா**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் சிவகந்தராசா நேற்று (17.05.2020) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சிவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலா தேவியின் அன்புக் கணவரும், பிரியதர்சன், குபேரன், நித்தியா (பிரான்ஸ்), செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திவேதிகா, சிரேஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜர்ஷகன், பிரஜயா, சஜேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சிறிகந்தராசா, மனோகரராசா மற்றும் சிவனேசராசா (பிரான்ஸ்), மங்கையற்கரசி (லண்டன்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), மல்லிகாதேவி ஆகியோரின் பாசமிகு சகோரனும், காலஞ்சென்றவர்களான ஜெயரத்தினம், குணரத்தினம், தவரத்தினம், வேதநாயகி மற்றும் கலைவாணி, நிர்மலா, அருளானந்தம், விஜயகுமார், ரகுநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2020) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப் பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
குபேரன் - 077 036 5647
செந்தூரன் 077 135 1217

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1949



மறைவு 16 . 05 . 2020

## அம்பலவானன் ஸ்ரீகரன்

**(ஆயுர்வேத வைத்தியர், சுதுமலை வைத்தியம்)**

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆயுர்வேத வைத்தியர் அம்பலவானன் ஸ்ரீகரன் (முன்னாள் விவசாய ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) கடந்த (16.05.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆயுர்வேத வைத்தியர் அம்பலவானன் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் யோகவதி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், மேகலா (கனடா), வாசுகி (கனடா), சுபாஷினி (சுதுமலை), சுகந்தினி (சுதுமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார் (கனடா), பாலஷாந்தன் (கனடா), அருள்வேல் (சுதுமலை), மதிவண்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனுஷன், விஷாதன், ஹரிஷன், மாதினி, அஜய், விஜய், அஷ்வின், ஷாயினி, ஆதினி ஆகியோரின் அன்புப் பேரனும், Dr.பொன்னம்பலம், காலஞ்சென்றவர்களான இராசாத்தி, சண்முகநாதன், கெங்காதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மனோகரன், புஷ்பராணி, கருணாகரன், ஜெயகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
தொ.பே.இல.**076 187 9228**

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 05 . 1944



மறைவு 16 . 05 . 2020

## திருமதி அருந்தவநாயகி குமாரசாமி

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வரணி மாசேரியையும், கனடாவையும் வசிப்பிடமாகக் கொண்ட திருமதி அருந்தவநாயகி குமாரசாமி கடந்த (16.05.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு தங்கநேசம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் குமாரசாமியின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காண்டீபன் (கனடா), கவிதா (அபிவிருத்தி உத்தி யோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்-யாழ்ப் பாணம்), பார்த்தீபன் (கனடா), பிரதீபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், யாழினி (கனடா), பா.முரளீதரன் (விரிவுரையாளர், யா/தேசிய கல்வியியற் கல்லூரி), தர்மா (கனடா), கௌதமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கரிஷ், நிகேஷ், சஞ்சீவன் (யாழ். இந்து கல்லூரி), அஷாந் (யாழ். இந்து கல்லூரி), சஸ்வினி, விதுர்ஷன், ஹரிணி, அக்ஷயா, அனனியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53, சிவகுருநாதர் வீதி,
பிறவுன் றோட், யாழ்ப்பாணம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0777 989 830**

# மரண அறிவித்தல்



## வைரமுத்து செந்திநாதன்

**(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர் யாழ். சுகாதாரத்திணைக்களம், முன்னாள் தலைவர் யாழ். கூட்டுறவு சங்கசமாசம், ப.நோ.கூ.சங்கம் சங்கானை, சமூக சேவையாளர்)**

யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி தற்போது சங்கானை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து செந்திநாதன் (இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர் யாழ். சுகாதாரத்திணைக்களம், முன்னாள் தலைவர் யாழ். கூட்டுறவு சங்கசமாசம், ப.நோ.கூ.சங்கம் சங்கானை, சமூக சேவையாளர்) கடந்த (16.05.2020) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து, நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், தபேந்திரன் (கனடா), நந்தினி (பிரான்ஸ்), நரேந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற ஜயேந்திரன் மற்றும் சுரேந்திரன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானா (கனடா), காலஞ்சென்ற மகேந்திரன் (பிரான்ஸ்) மற்றும் மாலா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பழனிநாதன் மற்றும் நவமணி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகதேவியின் அன்பு மைத்துனரும், நிமாஷா, திவ்யா, அனோஷன், நிர்ஷா, ப்ரியா, புருஷோத், தட்ஷா, மதுஷன் ஆகியோரின் அன்புப்பேரனும், அஜய், ஆதவ், ஆகியோரின் அன்புப்பூட்டனும், புவனேந்திரன், சர்வேந்திரன், தர்மேந்திரன், றமணேந்திரன், குமரேந்திரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அன்னார் வசித்த யாழ் வீதி, 1ஆம் ஒழுங்கை சங்கானையிலுள்ள இல்லத்தில் கிரிகைகள் நடைபெற்று, சங்கானை கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**றமணேந்திரன்: 0094773473515**
**குமரேந்திரன்: 0094774467640**
**தபேந்திரன்: 0016473947134**
**நந்தினி: 0033605812657**
**நரேந்திரன்: 00447448447661**
**சுரேந்திரன்: 0031636331136**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
யாழ் வீதி, 1ஆம் ஒழுங்கை
சங்கானை

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 05 . 1950



மறைவு 14 . 05 . 2020

## துரையப்பா கனகசுந்தரம்

யாழ். மானிப்பாய் சுதுமலை வடக்கு இணுவில் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பு வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா கனகசுந்தரம் கடந்த (14.05.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-இரத்தினம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-பூமணி தம்பதி யரின் அன்பு மருமகனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், கார்த்தீபா, கஜனதீபா, பிரதீபா (ஜேர்மனி), உதயரூபா, லக்சியா, தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, யோகராயா (கனடா), ரஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இலங்கநாதன், பத்மலோயினி (கனடா), சிவநேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத் துனரும், சுமன் (UAE), தவநேசன் (UAE), ஜெயகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரஷாத், தக்ஷினி, தினேயா, அபிலயா, ஆதிஷன், டிவ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மானிப்பாய் வீதி, கோம்பயன்மணலில் அமைந்துள்ள "இன்பம்" அந்தியகால சேவை நிலையத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# ருவாண்டா இனப்படுகொலையுடன் தொடர்புடையவர் பரிஸில் கைது!

## 25 வருடங்களின் பின்னர் சிக்கினார்

பரிஸ், மே 18

**ருவாண்டா இனப்படுகொலையுடன் தொடர்புடைய முக்கியநபர் எனச் சந்தேகிக்கப்படும் கபுகா என்பவர் பரிஸில் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு வயது - 69. சுமார் 25 வருடங்களாக தப்பி ஓடிப் பல நாடுகளில் தலைமறைவாகத் திரிந்த அவரை நேற்றுமுன்தினம் பிரான்ஸ் பொலிஸார் கைதுசெய்தனர்.**



ருவாண்டா இனப் படுகொலைகளுக்கு நிதி உதவி அளித்த முக்கிய புள்ளிகளில் இவரும் ஒருவர் என்று விசாரணையாளர்கள் கூறுகின்றனர்.

போலி அடையாள ஆவணங்களுடன் தலைமறைவாக வாழ்ந்த இவர் பரிஸின் புறநகர்ப் பகுதியில் வைத்து அதிரடிப்படையினரால் பிடிக்கப்பட்டார். கைதான நபர் பரிஸ் நீதிமன்றம் ஒன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு நெதர்லாந்தில் இயங்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச குற்ற விசாரணைகளுக்காக தேடப்பட்ட இவரைக் கைது செய்யும் பிடிஆணையை 'இன்ரபோல்' விடுத்திருந்தது.

இவரைப்பற்றிய தகவல் வழங்குவோருக்கு 5 மில்லியன் டொலர்கள் சன்மானம் வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் 1994ஆம் ஆண்டில் ஹுட்டு இனத் தீவிரவாதிகள் சிறு பான்மையின ரிட்ஷூ இனத்தவர்கள் மீதும் தங்கள் அரசியல் எதிர்ப்பாளர்கள் மீதும் நடத்திய மோசமான இனப்படுகொலையில் சுமார் எட்டு லட்சம் பேர் உயிரிழந்தனர் என மதிப்பிடப்படுகிறது.

இனப்படுகொலைக் குற்றங்களைப் புரிந்தவர்கள் என்றைக்காவது ஒரு நாள், அது 25 வருடங்களுக்குப் பிறகு என்றாலும் கூட கணக்குச்சொல்லியே ஆகவேண்டும் என்பதை இவரது கைது உணர்த்துகின்றது என்று ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் பொறிமுறை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தெரிவித்திருக்கிறார். (ம)

# சீனாவில் இருந்து வெளியேறும் நிறுவனங்களுக்கு வரிச்சலுகை!

## ட்ரம்ப் அரசு அதிரடி

வொஷிங்டன், மே 18



சீனாவில் இருந்து வெளியேறும் அமெரிக்க நிறுவனங்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் பொருளாதார ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் குறித்து உலக நாடுகளை சீனா எச்சரிக்கத் தவறிவிட்டது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அமெரிக்காவில் 87 ஆயிரத்து 530 பேர் உயிரிழந்துள்ளனர். ஆராய்ச்சிப் பணிகளில் காப்புரிமையை திருடிவிட்டதாகவும் சீனா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தொடக்கத்தில்தான் வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் சீனாவும் கையெழுத்திட்டன. ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளாக நடைபெற்று வந்த வர்த்தகப் போர் இதன் மூலம் முடிவுக்கு வந்தது.

சீனா அமெரிக்கா இடையேயான வர்த்தகப் போர் சர்வதேச அளவில் பிற நாடுகளையும் பாதித்து வந்த நிலை யில், ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் தற்போது கொரோனா வைரஸ் தொற்று இரு நாடுகளிடையே மீண்டும் உரசலை ஏற்படுத்தி யுள்ளது.

இந்த நிலையிலேயே சீனாவில் இருந்து வெளியேறும் அமெரிக்க நிறுவனங்களுக்கு வரிச்சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

தரமான பொருட்கள் விற்பனைக்கு
TVM Transport கட்டடப்பொருள்களை மிகக் குறைந்த விலையில் சிறந்த தரமான பொருள்களான
• METAL 1", 1 1/2", 1/2", 9x6
• CHIPS • DUST • MIX
• SAND • BLOCK STONE
ஆகியவற்றை தெரிவு செய்து கொள்வதற்கு தொடர்பு கொள்ளவும்
077 766 6620

# சர்வதேசப் பயணங்களுக்கு இத்தாலி ஜூனில் அனுமதி

உரோம், மே 18

இத்தாலியில் ஜூன் மாதம் 3ஆம் திகதியில் இருந்து சர்வதேச பயணங்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இத்தாலியில் கொரோனா வைரஸ் ஆரம்ப கட்டத்தில் கடும் தீவிரத்தன்மை கொண்டிருந்தது. தற்போது அதன் தீவிரம் குறைந்திருக்கிறது. இதனைத் தொடர்ந்து இத்தாலி அரசு நெருக்கடி நிலையைத் தளர்த்தி வருகிறது. இதுகுறித்து இத்தாலி ஊடகங்கள், 'இத்தாலியில் வரும் ஜூன் மாதம் முதல் சர்வதேச பயணத்தை அனுமதிக்க அரசு ஒப்புதல் வழங்கியது. அதே நாளில் உள்நாட்டிலும் பயணங்கள் மேற்கொள்ள மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு நாட்டில் பயணத்தடை நீங்க உள்ளதற்கு இத்தாலி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். முன்னதாக, மே மாதம் 4ஆம் திகதி முதல் இத்தாலியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு பூங்காக்கள், உணவு நிலையங்கள், விடுதிகள், தொழிற்சாலைகள் ஆகியவை திறக்க அனுமதி வழங்கப்பட்டது.

ஊரடங்கு பெருமளவு தளர்த்தப்பட்ட நிலையில் மக்கள் சமூக இடைவெளியை கவனமாகப் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் இத்தாலி கொரோனா தொற்றுக்கு மிக மோசமான அளவில் பாதிக்கப்பட்டது. இத்தாலியில் சுமார் 2 லட்சத்து 23 ஆயிரத்து 885 பேர் பாதிக்கப்பட்டனர். 31 ஆயிரத்து 610 பேர் பலியாகினர். (ம)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.